بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 10

இதழ் 14 & 15

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1446 - ஷவ்வால் 04 -11 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - ஷஹாதத் 03 - 10 ★ 03 - 10 ஏப்ரல் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

اَيَّامًا مَّعۡدُوۡدٰتٍ ؕ فَمَنۡ كَانَ
مِنۡكُمۡ مَّرِيۡضًا اَوۡ عَلٰى سَفَرٍ
فَعِدَّةٌ مِّنۡ اَيَّامٍ اُخَرَ ؕ

**பொருள்**

**(எனவே) கணிக்கப்பட்ட நாள்களில் (நோன்பு நோற்றுக் கொள்க). உங்களுள் நோயாளியாகவோ, பயணியாகவோ இருப்பவர் (விடுபட்ட நோன்பை) மற்ற நாட்களில் நோற்க வேண்டும்**

**(அல்பக்கரா: 185)**

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இந்த மாதம் உள்ளத்தை ஒளிமயமாக்குவதற்கு சிறந்த மாதம் ஆகும். இந்த மாதத்தில் அதிகமாக ஆன்மிகக் காட்சி கிடைக்கின்றது. தொழுகை உள்ளத்தை பரிசுத்தப்படுத்துகின்றது; மேலும் நோன்பு உள்ளத்தை ஒளிமயமாக்குகின்றது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து……

மஃக்ரிப் தொழுகைக்கு சில நிமிடங்களுக்கு முன்னர் ரமலான் மாதத்தின் பிறை பார்க்கப்பட்டது. ஹுஸுர் அன்வர் (அலை) அவர்கள் மக்ரிப் தொழுகையை முடித்து விட்டு மஸ்ஜிதுடைய மேல்தளத்திற்கு பிறையை பார்ப்பதற்காக சென்றார்கள். மேலும், பிறையைப் பார்த்த பிறகு பின்னர் மஸ்ஜிதிற்கு வருகை தந்தார்கள்.

கூறினார்கள்:

கடந்த வருட ரமலான் நேற்று கடந்தது போன்று இருக்கின்றது.

شَهۡرُ رَمَضَانَ الَّذِىۡٓ اُنۡزِلَ فِيۡهِ الۡقُرۡاٰنُ

என்பதிலிருந்து ரமலானின் மகத்துவம் தெரிய வருகின்றது. இந்த மாதம் உள்ளத்தை ஒளிமயமாக்குவதற்கு சிறந்த மாதம் ஆகும். இந்த மாதத்தில் அதிகமாக ஆன்மிகக் காட்சி கிடைக்கின்றது. தொழுகை உள்ளத்தை பரிசுத்தப்படுத்துகின்றது; மேலும் நோன்பு உள்ளத்தை ஒளிமயமாக்குகின்றது என்று ஸூஃபிமார்கள் எழுதியுள்ளார்கள். உள்ளத்தை பரிசுத்தமாக்குதல் என்பதன் பொருள் இதுவாகும்; அதாவது, நஃப்ஸே அம்மாரா (தீமையின் பக்கம் சாய்க்கும்) எனும் ஆன்மாவின் மனஇச்சையிலிருந்து விடுதலை கிடைப்பதாகும். மேலும், உள்ளம் ஒளிமயமாகுதல் என்பதன் பொருள் இதுவாகும்; அதாவது, ஆன்மிக காட்சிக்கான வாசல்கள் அவர் மீது எவ்வாறு திறக்க வேண்டும் என்றால் அவர் இறைவனை கண்டு கொள்ள வேண்டும். எனவே .

اُنۡزِلَ فِيۡهِ الۡقُرۡاٰنُ

என்பதில் இந்த விஷயமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. நோன்பிற்கு மகத்தான நற்கூலி இருக்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால், நோய்களும் சில நோக்கங்களும் அந்த அருட்கொடையிலிருந்து மனிதனை இழப்பிற்குரியவனாக ஆக்கிவிடுகின்றன. எனக்கு

இதன் தொடர்ச்சி …9-ம் பக்கம் காண்க

## நோன்பின் ஓர் ஆன்மிக பயன் இதுவாகும். அதாவது மனிதனுக்கு வல்ல இறைவனுடன் உயர்தரமான தொடர்பு ஏற்பட்டு விடுகின்றது. மேலும் இறைவன் சுயமே மனிதனது பாதுகாவலனாகிவிடுகின்றான்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நோன்பின் ஓர் ஆன்மிக பயன் இதுவாகவும் இருக்கின்றது. அதாவது அதனால் மனிதன் இறைவனுடன் ஒப்புமையை மேற்கொள்கின்றான். வல்ல இறைவனுடைய ஒரு பண்பு என்னவென்றால், அவன் உறக்கத்திலிருந்து தூய்மையானவன். மனிதன் தனது தூக்கத்தை முற்றிலும் விட்டுவது என்பது முடியாத காரியமாகும். ஆனால், அவன் தனது தூக்கத்தின் ஒரு பகுதியை நோன்புகளில் நிச்சயமாக இறைவனுக்காக தியாகம் செய்கின்றான். ஸஹ்ரீ உண்பதற்காக அவர் எழுகின்றார். தஹஜ்ஜுத் தொழுகின்றார். நோன்புகள் நோற்காத பெண்களும் கூட ஸஹ்ரீக்கான ஏற்பாட்டை செய்வதற்காக எழுகின்றனர். சிறிது நேரத்தை துஆக்களிலும், சிறிது நேரத்தை தொழுகையிலும் செலவழிக்க நேரிடுகின்றது. மேலும், இவ்வாறு இரவின் மிகக் குறைந்த பகுதியே உறங்குவதற்காக மீதம் இருக்கின்றது. மேலும் பணி செய்யக் கூடியவர்களுக்கு வெப்பத்தின் நாட்களில் இரண்டு, மூன்று மணிநேரம் மட்டுமே தூங்குவதற்கு எஞ்சியிருக்கின்றது. இவ்வாறு மனிதனுக்கு அல்லாஹ்வுடன் ஓர் ஒப்புமை உருவாகி விடுகின்றது. இதே போன்று அல்லாஹ் உண்பதிலிருந்து தூய்மையானவன் ஆவான். மனிதனால் உண்பதையும், பருகுவதையும் முழுவதுமாக விட்டு விட முடியாது. ஆனால், இருந்தாலும் கூட ரமலான் மாதத்தில் அவர் அல்லாஹ்வுடன் ஒரு வகையில் ஒப்புமையை நிச்சயமாக உருவாக்கி விடுகின்றார். அடுத்து, எவ்வாறு அல்லாஹ்விடமிருந்து நன்மை மட்டுமே வெளிப்படுகின்றதோ அதே போன்று மனிதனுக்கு நோன்புகளின் நிலையில் குறிப்பாக நன்மைகளை செய்வதற்கு கட்டளை உள்ளது. இறைத் தூதர்

இதன் தொடர்ச்சி …9-ம் பக்கம் காண்க

## நபிமொழி

**ரமலானின் சிறப்புகள்**

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல் கூறினார்கள்: எந்தவொரு நபர் லைலத்துல் கத்ரில் ஈமான் கொண்டு நற்கூலிக்கான எண்ணத்துடன் இறைவணக்கத்தில் நிற்பாரோ அவரது முந்தைய அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. மேலும் எந்தவொரு நபர் ரமலானின் நோன்புகளை ஈமானுடன், நற்கூலிக்கான எண்ணத்துடன் நோற்பாரோ அவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 3, கிதாபுஸ் ஸவ்ம், 2008-ம் ஆண்டு காதியான் பதிப்பு)

**130-வது காதியான் ஆண்டு மாநாடு - 2025 டிசம்பர் 26,27,28 ஆகிய தேதிகளில் நடைபெறும்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 130-வது காதியான் ஆண்டு மாநாட்டை 2025-ம் ஆண்டு, டிசம்பர் 26,27, 28 ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் துஆக்கள் செய்வதுடன் இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு எண்ணம் கொண்டு தயாரிப்புகள் செய்வதை துவங்கிவிடுங்கள். இறைவனுக்காக நிகழும் இந்த ஆண்டு மாநாட்டில் அதிகமான ஜமாஅத் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பயன்பெறுவதற்கு அல்லாஹ் நற்பேறு வழங்குவானாக! இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்காக ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் செய்துள்ள துஆக்களுக்கு அல்லாஹ் நம் அனைவரையும் வாரிசாக்குவானாக! ஆமீன்!

(நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஆற்றிய வியக்கத்தக்க அறிவார்ந்த பணிகளின் சுருக்கமும் ஞானம் நிறைந்த நற்குறிப்புகளும்**

வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களைக் கொண்டு எப்படிப்பட்ட அறிவார்ந்த, மார்க்க மற்றும் நிர்வாக பணிகளை செய்ய வைத்தான் என்றால் நன்கு கற்றறிந்த பெரும் பெரும் அறிஞர்கள் கூட அன்னாருக்கு முன்னால் பள்ளிக் கூட மாணவர்களாக தோன்றுகின்றனர். முற்றிலும் சிறுவர்களாக இருக்கின்றனர். மேலும் அன்னாருடைய ஐம்பத்திரண்டு வருட கால கிலாஃபத் காலகட்டம் இதற்கு உயிருள்ள சான்றாக இருக்கின்றது.

இன்று முன்னரை விட அதிகமாக முஸ்லிம் உலகமும், அரபு உலகமும் இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அதாவது, வெறும் முழக்கமிடுவதால், கூட்டங்கள் நடத்துவதால் பணி நடக்காது. செயல்ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் தங்களது தவறுகளை திருத்திக் கொண்டு வல்ல இறைவனின் பக்கம் திரும்ப வேண்டும். மேலும், அவர்கள் முதலில் இஸ்லாத்தை புரிய வேண்டும். மேலும், அதன் உண்மைத்துவத்தை அறிந்து கொள்ள வேண்டும். மேலும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். அப்போதுதான் முஸ்லிம்கள் மீது வந்து கொண்டிருக்கும் பின்னடைவும் வீழ்ச்சியும் அகல முடியும். அவர்கள் மார்க்கத்திற்காக பிரச்சாரம் செய்யவில்லையென்றால், இறைவனின் கட்டளையின் கீழ் அவர்கள் இந்த தன்னிகரற்ற போதனையை உலகிற்கு முன்னால் வைக்கவில்லையென்றாலும் கூட தமது வாழ்வை நிலைநிறுத்திக் கொள்வதற்காவது சற்று முயற்சி செய்ய வேண்டும். உயிருடன் இருக்க வேண்டும் என்றால் பின்னர் அதற்காக சற்று முயற்சி செய்யுங்கள். ஏனெனில், அவர்களின் வாழ்வும், இஸ்லாத்தின் பிரச்சாரமும் ஒன்று மற்றொன்றை சார்ந்திருக்கின்றது (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) )

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 பிப்ரவரி 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **தப்லீஃக்** மாதம் **24 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّينِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۝
صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۝

நேற்றைய தினம் பிப்ரவரி 20-ம் தேதியாக இருந்தது.இந்த நாள் ஜமாஅத்தில் வாக்களிக்கப்பட்ட முஸ்லிஹ் மவ்வூத் தொடர்பான நாளாக அறியப்படுகின்றது. இது தொடர்பாக அந்த நாளன்றோ அல்லது அந்த நாளுக்கு முன்னரோ பின்னரோ ஜமாஅத்தில் ''முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பு'' கூட்டங்களும் நடக்கின்றன.

இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு நீண்ட முன்னறிவிப்பாகும். அதில் ஒரு மகனின் பிறப்பு மற்றும் அவரது சிறப்புகளைப் பற்றிய குறிப்பு இருக்கின்றது. பிப்ரவரி 20, 1889 அன்று அது பிரசுரத்தின் வடிவில் வெளியிடப்பட்டது. இந்த முன்னறிவிப்பில் (வாக்களிக்கப்பட்ட) அந்த மகனுடைய சிறப்புகளைக் குறித்து இல்ஹாமுடைய ஒரு பகுதி இவ்வாறு இருக்கின்றது:

அவர் மிகவும் புத்திக்கூர்மையுடையவராகவும், புரிதல் உடையவராகவும் இருப்பார். அடுத்து, ..........அவர் பௌதீக மற்றும் ஆன்மிக ஞானங்களால் நிரப்பப்படுவார் என்று இருக்கின்றது. (ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 5, பக்கம் 647)

மேலும் அல்லாஹ் இதற்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு மகனை அருளினான். அவர் இந்த சிறப்புகளை கொண்டவராக இருந்தார். அவரது பெயர் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் என்பதாக இருந்தது. அவர் முஸ்லிஹ் மவ்வூத் (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி) என்றும் அழைக்கப்படுகின்றார். எந்த பிள்ளைகள் எல்லாம் ஜமாஅத்தின் இந்த நாளைக் குறித்து அறிந்திருக்கின்றார்களோ அவர்கள் இந்த முன்னறிவிப்பைக் குறித்து நன்கறிந்திருக்கின்றனர். பெரியவர்களோ நன்றாக அறிந்திருக்கின்றனர். அத்ஃபால், குத்தாம் என எல்லா மட்டத்திலும் (இது தொடர்பான) கூட்டங்கள் நடக்கின்றன.

(வாக்களிக்கப்பட்ட) அந்த மகன் பௌதீக மற்றும் ஆன்மிக ஞானங்களால் நிரப்பப்படுவார் என்று முன்னறிவிப்பின் சொற்களில் இருப்பது போன்று வல்ல இறைவன் சுயமே அவருக்கு புத்திக்கூர்மையை வழங்கினான்; மேலும் அவரை ஞானங்களால் நிரப்பினான். உலகியல் ரீதியில் அன்னாரது கல்வி என்பது அநேகமாக பிரைமரி வரையே இருந்தது. இன்னும் கூறப்போனால், அது கூட இருக்கவில்லை. ஆம்! பள்ளிக்கூடம் சென்று கொண்டிருந்தார்கள் தான்; ஆனால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சுயமே எழுதியுள்ளார்கள். கூறியுள்ளார்கள். அன்னார் (ரலி) ஒருபோதும் தேர்வுகளில் தேர்ச்சிப் பெற்றதில்லை. (கல்விக் கூடங்களில் கற்பிக்கப்பட்ட) உலகியல் பாடங்களில் அன்னார் (ரலி) மிகவும் பலவீனராக இருந்தார்கள். ஆனால், வல்ல அல்லாஹ் அன்னாரைக் கொண்டு எப்படிப்பட்ட அறிவார்ந்த, மார்க்க மற்றும் நிர்வாக பணிகளை செய்ய வைத்தான் என்றால் நன்கு கற்றறிந்த பெரும் பெரும் அறிஞர்கள் கூட அன்னாருக்கு முன்னால் பள்ளிக் கூட மாணவர்களாக தோன்றினர். முற்றிலும் சிறுவர்களாக இருந்தனர். மேலும் அன்னாருடைய ஐம்பத்திரண்டு வருட கால கிலாஃபத் காலகட்டம் இதற்கு உயிருள்ள சான்றாக இருக்கின்றது.

அன்னார் (ரலி) உலகின் பல்வேறு தலைப்புகளில் எண்ணற்ற சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்கள். மார்க்கம் மற்றும் திருக்குர்ஆன் ஞானத்திற்கோ எல்லையே கிடையாது. உலகியல் தலைப்புகளிலும், உள்நாட்டு அரசியல் மற்றும் சர்வதேச அரசியல் தொடர்பாகவும் அன்னார் (ரலி) சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்; கட்டுரைகள் எழுதினார்கள். வரலாற்று ரீதியாக அசாதாரண தரத்தைக் கொண்ட கட்டுரைகள் எழுதினார்கள். மேலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பொருளாதார விவகாரங்கள் மற்றும் உலகின் பல்வேறு அமைப்புகளில் சோஷியலிஸம், கம்யூனிஸம், கேபிடலிஸம் தொடர்பாகவும் அன்னார் (ரலி) கருத்துகளை கூறியுள்ளார்கள். மேலும் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் அது நூல் வடிவிலும் வெளியானது. இது ஜமாஅத் நூல்களில் இடம் பெற்றுள்ளது. எந்த அளவுக்கு என்றால், பாதுகாப்பு விவகாரங்கள், இராணுவ விவகாரங்கள், அறிவியல் மற்றும் அறிவார்ந்த தலைப்புகளிலும் அறிவு மற்றும் ஞானத்தின் எப்படிப்பட்ட கருத்துகளை எடுத்துரைத்துள்ளார்கள் என்றால், மனிதனின் அறிவு ஆச்சரியத்தில் உறைந்து விடுகின்றது. அந்நியர்களுக்கு முன்னால் அன்னார் ஏராளமான சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்கள். மேலும், அவற்றை செவியுற்று அன்னாரின் ஆழமான சிந்தனை மற்றும் ஞானத்தை அவர்களால் பாராட்டாமல் இருக்கவே முடியவில்லை.

இந்தக் கட்டுரைகளும், சொற்பொழிவுகளும் ஆயிரக்கணக்கான பக்கங்களை கொண்டிருக்கின்றன. குறுகிய நேரத்தில் அவற்றின் விளக்கத்தை எடுத்துரைப்பது சாத்தியமற்றதாகும். இன்னும் கூறப்போனால், அறிமுகத்தை மட்டும் எடுத்துரைப்பதே சாத்தியமற்றதாகும். உதாரணமாக, சில விஷயங்களை இங்கு முன் வைக்கின்றேன். அவை வெறும் அறிமுகத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன.

இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு, புதிய அமைப்பு, இஸ்லாத்தில் பிரிவினைக்கான ஆரம்பம் போன்ற இந்த தலைப்புகளோ எப்படிப்பட்டவை என்றால்,

அவற்றை குறித்து பெரும்பாலும் ஜமாஅத்தில் பேசப்படுகின்றது. இவற்றை கடந்த வேறு சில கட்டுரைகள் இருக்கின்றன. அவை பொதுவாக மக்களின் கவனத்திற்கு வருவதில்லை. அவற்றின் அறிமுகத்தை நான் (இன்று) எடுத்துரைப்பேன்.

அன்னார் (ரலி) ''துருக்கியின் எதிர்காலமும் முஸ்லிம்களின் கடமையும்'' என்ற தலைப்பில் ஓர் ஆலோசனை வழங்கினார்கள். அது குறித்து கருத்து தெரிவித்தார்கள். இது 1919-ம் ஆண்டு நிகழ்ந்த விஷயம்- அதாவது அன்னாருடைய கிலாஃபத் காலத்தின் தொடக்க கால நிகழ்வாகும். இதன் சுருக்கம் அல்லது அறிமுகம் இவ்வாறாகும். அதாவது, மார்க்க ஒற்றுமைமிக்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலிருந்தும் முழுமையாக பயனடையும் வகையில் செயல்பட்டார்கள். ஆக, ஹுஸூர் (ரலி) அவர்கள் துருக்கி அரசாங்கம் ஆபத்தில் இருந்த இந்த நேரத்தில் மிகவும் ஞானம் மிக்க வழிகாட்டலை வழங்கியவாறு டிசம்பர் 18, 1919 அன்று இந்த நூலை எழுதினார்கள். பலதரப்பட்ட சிந்தனைகளைக் கொண்ட முஸ்லிம்களின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்காக அன்னார் (ரலி) இந்த வழிகாட்டும் விதிமுறையை எடுத்துரைத்தார்கள்:

எனது பார்வையில், இந்த மாநாட்டின் அடிப்படை இந்த விஷயம் மட்டுமே இருக்க வேண்டும்.

அதாவது ஒரு மாநாடு நடைபெற இருந்தது. அங்கு துருக்கி அரசாங்கத்திற்கு ஆதரவாக அன்னார் (ரலி) இதனை குறிப்பிடுகின்றார்கள்.

முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்ளும் ஒரு அரசாங்கத்தை அகற்றிவிடுவது அல்லது அதற்கு மாநில அந்தஸ்து வழங்குவது எப்படிபட்ட ஒரு செயல் என்றால், அதனை தம்மை முஸ்லிம் என்று கூறிக் கொள்ளும் ஒவ்வொரு பிரிவும் வெறுக்கின்றது. அதன் எண்ணமே கஷ்டமாக இருக்கின்றது.

பின்னர் அன்னார் (ரலி) இதனையும் கூறினார்கள்:

துருக்கிய அரசாங்கம் மற்றும் இஸ்லாமிய தலைமையகம் ஹிஜாஸ் தொடர்பான எனது வழிகாட்டல் என்பது இவ்வாறாகும்.

அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: அரேபியர்களின் சமுதாய உணர்வு பொங்கி எழுந்து கொண்டிருக்கின்றது. மேலும், அதன் போராட்ட நரம்பு வெடித்துக் கொண்டிருக்கின்றது. 1300 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது அவர்கள் மீண்டும் தமது நான்கு சுவர்களுக்கு தாங்களே ஆட்சியாளர் ஆனார்கள். மேலும், தனது அழகிய நிர்வாகம், நீதி நேர்மையால் அந்த சமுதாயம் தனது உரிமையை நிறுவியுள்ளது. அது தொடர்பான எந்தவொரு புதிய திட்டமும் வெற்றிபெறவும் முடியாது; அதனை எந்தவொரு அறிவார்ந்த மனிதரும் ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

துருக்கியின் நலனிற்காக அன்னார் (ரலி) இந்தவொரு ஆலோசனையும் வழங்கினார்கள்.

அதாவது, வெறும் ஜல்ஸாக்கள் மற்றும் சொற்பொழிவுகளால் வேலை நடக்காது. மேலும் பணத்தை ஒன்றுதிரட்டி பிரசுரங்கள் மற்றும் நோட்டீஸ்கள் வெளியிடுவதால் மட்டும் பயனில்லை. ........மாறாக, உலகின் அனைத்து நாடுகளிலும் இந்த விவகாரத்தை செயல்படுத்துவதற்காக ஒரு முறையான கடும் உழைப்புடன் கூடிய அமைப்பை நிறுவ வேண்டும். இந்த காலம் அறிவார்ந்த காலமாகும்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

இந்த காலம் அறிவார்ந்த காலமாகும். மேலும் மக்கள் ஒவ்வொரு விஷயத்திற்கும் சான்றைக் கேட்கின்றனர். .........எனவே இந்த கடின பணியை முழுமை செய்வதற்காக முறையான ஒரு ஏற்பாடு இருக்க வேண்டும். ..........பயனற்ற பணி அறிவு படைத்தவர்களின் பணி கிடையாது.

இதே விஷயத்தை இன்றும் முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும். இந்த விஷயமோ அந்தக் காலத்தில் துருக்கி அரசாங்கத்துடன் மட்டுமே தொடர்புடையதாக இருந்தது. இன்று முன்னரை விட அதிகமாக முஸ்லிம் உலகமும், அரபு உலகமும் இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அதாவது, வெறும் முழக்கமிடுவதால், கூட்டங்கள் நடத்துவதால் பணி நடக்காது. செயல்ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

துருக்கியர்கள் அல்லது இஸ்லாத்திற்கு எதிரான பகைமை மற்றும் காழ்ப்புணர்சிக்கான காரணத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (ரலி) கூறினார்கள்:

மூதாதையர்களிடமிருந்து அவர்களின் உள்ளத்தில் அதாவது இஸ்லாத்திற்கு எதிரான அந்த மக்களின் உள்ளங்களில் இஸ்லாத்தைக் குறித்து எந்த அளவுக்கு தப்பெண்ணங்கள் குடிகொண்டு விட்டன என்றால், அவர்கள் இஸ்லாத்தை ஒரு சாதாரண மார்க்கம் என்ற ரீதியில் கருதுவதில்லை. இன்னும் கூறப்போனால், மனிதனை மனிதத்துவத்திலிருந்து வெளியேற்றி விலங்காக அதுவும் காட்டுவிலங்காக மாற்றி விடுகின்ற ஒரு போதனையாக இஸ்லாத்தை அவர்கள் கருதுகின்றனர். ............... இஸ்லாத்தை தவிர மற்ற மார்க்கங்களின் மீது அவர்கள் அச்சம் கொள்வதில்லை........ ஆயினும், வெறுக்கத்தக்கதாக கருதுகின்றனர். ஆனால் இஸ்லாத்தின் மீது அச்சம் கொள்கின்றனர்.

அதாவது இஸ்லாத்தை எதிர்க்கக் கூடிய மக்கள் இருக்கின்றனரே அவர்கள் அதன் முன்னேற்றத்தை நாகரீகம் மற்றும் பண்பாட்டின் வழியில் தடையாகவே கருதுகின்றனர். இன்னும் கூறப்போனால், மனிதகுலத்தை அழிக்கக்கூடிய ஒன்றாக அவர்கள் நம்புகின்றனர்.

இன்றைய நாட்களிலோ இதன் மீதும் முன்பை விட அதிக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் வலதுசாரி அமைப்புகள் இருக்கின்றனர் அல்லது மற்றவர்கள் இருக்கின்றனர் அவர்கள் இஸ்லாத்திற்கு எதிரான பெரும் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர். முஸ்லிம்களுக்கு எதிராக திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர். இந்த சூழலை மாற்றுவதற்காக அன்னார் (ரலி) இந்த வழிகாட்டலை வழங்கினார்கள்:

முஸ்லிம்கள் தங்களது தவறுகளை திருத்திக் கொண்டு வல்ல இறைவனின் பக்கம் திரும்ப வேண்டும். மேலும், அவர்கள் முதலில் இஸ்லாத்தை புரிய வேண்டும். மேலும், அதன் உண்மைத்துவத்தை அறிந்து கொள்ள வேண்டும். மேலும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். அப்போதுதான் முஸ்லிம்கள் மீது வந்து கொண்டிருக்கும் பின்னடைவும் வீழ்ச்சியும் அகல முடியும்..........




அவர்கள் மார்க்கத்திற்காக பிரச்சாரம் செய்யவில்லையென்றால், இறைவனின் கட்டளையின் கீழ் அவர்கள் இந்த தன்னிகரற்ற போதனையை உலகிற்கு முன்னால் வைக்கவில்லையென்றாலும் கூட தமது வாழ்வை நிலைநிறுத்திக் கொள்வதற்காவது சற்று முயற்சி செய்ய வேண்டும். உயிருடன் இருக்க வேண்டும் என்றால் பின்னர் அதற்காக சற்று முயற்சி செய்யுங்கள். ஏனெனில், அவர்களின் வாழ்வும், இஸ்லாத்தின் பிரச்சாரமும் ஒன்று மற்றொன்றை சார்ந்திருக்கின்றது.

செயல்நிலையில் இதுதானே நிகழ்ந்திருக்கின்றது இல்லையா? (முஸ்லிம்களாகிய) அவர்கள் எப்போது இஸ்லாத்தை முன் வைத்தார்கள்? (துருக்கியின் எதிர்காலம், அன்வாருல் உலூம், பாகம் 4, பக்கம் 16 - 18)

ஆக, இதே விதிமுறையை இன்றும் முஸ்லிம்கள் மேற்கொள்வது அவசியமாகும். இல்லையென்றால், இஸ்லாத்திற்கு எதிரான உலகம் முஸ்லிம் நாடுகளின் சுற்று வட்டாரத்தை நெருக்கடிக்கு ஆளாக்கிவிடும். ஆளாக்கி வருகின்றது.

அடுத்து, ஆல் முஸ்லிம் பார்டீஸ் மாநாட்டிற்கான ஒரு சந்தர்ப்பம் உருவானது. அதில் அன்னார் (ரலி) ஆல் முஸ்லிம் பார்டீஸ் மாநாட்டின் நிகழ்ச்சியின் மீது ஒரு பார்வை என்ற தலைப்பில் வழிகாட்டல் வழங்கினார்கள்.

இந்த சிறிய நூலை ஹுஸூர் அன்வர் (ரலி) அவர்கள் "ஆல் இன்டியா முஸ்லிம் பார்டீஸ் கான்ஃபிரன்ஸ்'' கூட்டத்தில் முன்வைப்பதற்காக ஜுலை 13, 1925 அன்று எழுதினார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் கூட்டத்தில் நேரடியாக கலந்து கொண்டு தமது கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும் என்பது மாநாட்டு ஏற்பாட்டாளர்களின் விருப்பமாக இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதினார்கள்:

என்னால் நேரடியாக இதில் கலந்து கொள்ள முடியவில்லை என்பதற்காக நான் வருந்துகிறேன். ஆனால், எனது பிரதிநிதிகள் மூலமாக எனது எண்ணங்களை நான் முன்வைக்கின்றேன்.

இந்த சிறிய நூலில் ஹுஸூர் (ரலி) அவர்கள் எல்லாவற்றையும் விட முதலில் இஸ்லாத்தின் மார்க்கம் மற்றும் அரசியல் பற்றிய அறிமுகத்தை எடுத்துரைத்தார்கள். மேலும் கூறினார்கள்: இஸ்லாத்தின் ஒரு மார்க்க அறிமுகம் இதுவாகும். அதாவது ஒவ்வொரு நபரும் விரும்பியபடி அதற்கு பொருள் கொடுப்பதற்கு எல்லா நபருக்கும் அதிகாரம் உள்ளது. இரண்டாவது, இஸ்லாத்தின் அரசியல் பொருள் இருக்கின்றது. அரசியல் ரீதியாக எந்த மக்கள் முஸ்லிம்கள் ஆவர்? இதற்கான பதிலை இந்துக்களும், கிறிஸ்தவர்களுமே கொடுக்க முடியும். எந்த மக்களுடன் முஸ்லிம்களின் அரசியல் தொடர்பு இருக்கின்றதோ அவர்களே கொடுக்க முடியும். ஏனெனில், தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்கின்ற மற்றும் கருதுகின்ற ஒரு கூட்டத்தின் தொண்டர்கள் இருக்கின்றனர். அவர்களை மற்ற பிரிவின் மக்கள் முஸ்லிம் அல்லாதோர் என்று கருதினாலும் சரியே! ஆனால்,

அரசியலில் இந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் அவர்களுடன் நடந்து கொள்ளும் போது அவர்களுடன் ஒன்றாகவே நடந்து கொள்வார்கள். அவர்கள் ஒரு சமுதாயத்திற்கு எதிராக மேற்கொள்கின்ற நடவடிக்கையையே மற்ற சமுதாயத்திற்கு எதிராகவும் மேற்கொள்வார்கள்.

அதாவது எல்லாப் பிரிவினரையும் முஸ்லிம்கள் என்று கருதியே மேற்கொள்வர். எனவே அரசியல்வாதிகள் அவர்களின் நலனில் ஒன்றுபட்டு இருக்கின்றனர். முஸ்லிம்கள் இந்த கருத்தை புரியவில்லை என்றால் அந்நியர்கள் ஒவ்வொருவராக அவர்களை தின்று விடுவார்கள். அவர்களுக்கு எப்போது விழிப்பு வரும் என்றால் அப்போது விழிப்பு வந்து எந்த பயனும் இருக்காது.

எனவே ஹுஸூர் அன்வர் (ரலி) அவர்கள் அனைத்து முஸ்லிம் பிரிவுகளுக்கு முன்பும் இந்த பொன்னான விதிமுறையை முன்வைத்தார்கள். அதாவது, அரசியல் விவகாரங்களில் முஸ்லிம்கள் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில், அரசியல் ரீதியாக நீங்கள் ஒரு சமுதாயத்தை தனித்து விடுவீர்கள் என்றால் பின்னர் அவர்கள் மற்ற சமுதாயங்களின் பக்கம் செல்லாமல் இருப்பது எப்படி சாத்தியமாகும்?

இதன் பிறகு, இஸ்லாத்தின் முன்னேற்றம் , மேன்மை மற்றும் அதன் அரசியல் உறுதிப்பாட்டிற்காக சில ஆலோசனைகளை முன்வைத்தார்கள். மேலும் கூறினார்கள்:

இஸ்லாத்தின் உறுதிப்பாட்டிற்கு இந்த விஷயம் அவசியமாகும். அதாவது, முழு இந்திய நாட்டிலும் தப்லீஃக் அமைப்பை ஏற்படுத்த வேண்டும்; மேலும் தப்லீஃக் அமைப்புகளுக்கு இடையில் ஒற்றுமைக்கான ஏதாவது ஒரு வழியை உருவாக்க வேண்டும். ஏனெனில், இஸ்லாத்தின் வாழ்வு என்பது தப்லீஃக்கையே சார்ந்திருக்கின்றது. அதற்காக முழுமையான அமைப்பை நிறுவுவதற்கு அவசியம் உள்ளது. (தற்போதோ இதற்கான செயற்களம் முழு உலகம் வரை நீண்டு விட்டது) மேலும் முஸ்லிம்களின் தொழில் மற்றும் கல்வி மைதானங்களில் முன்னேற்றத்திற்காக முறையான துறைகள் நிறுவப்பட வேண்டும். ஒவ்வொரு துறைக்கும் ஓர் இலக்கு இருக்க வேண்டும்; மேலும் ஆண்டின் இறுதியில் இலக்கு எதுவரை எட்டப்பட்டுள்ளது? என்பதை கூற வேண்டும்.

தற்போதோ இது இஸ்லாத்தின் பெரும் பெரும் அரசாங்கங்களின் பணியாகும்.

மேலும், முஸ்லிம்களை மற்ற சமுதாயத்தின் தாக்கத்திலிருந்து எவ்வாறு பாதுக்க முடியும்? மேலும் வாழ்வியல் துறைகளில் எந்தெந்த துறைகளில் நிபுணத்துவம் பெற்ற முஸ்லிம்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது? போன்ற விவகாரங்களை ஆய்வு செய்யக் கூடிய ஒரு கமிட்டியை தற்போது உடனடியாக நிறுவுவதும் அவசியமாகும். பின்னர் அந்தக் கமிட்டி அந்த குறையை நீக்குவதற்காகவும் முயற்சி செய்ய வேண்டும்.

இதே போன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் முஸ்லிம் வங்கியை நிறுவுதலின் மீதும் மிகுந்த அழுத்தம் கொடுத்தார்கள். மேலும் கூறினார்கள்: வட்டியின்றி செயல்படும் ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கினால் எங்களது ஜமாஅத்தும் அதில் பங்கெடுப்பதற்கு தயாராக இருக்கின்றது. மேலும், அன்னார் (ரலி) பைத்துல் மால் மற்றும் முஸ்லிம் சேம்பர் ஆஃப் காமர்ஸ் போன்றவற்றை நிறுவுவதற்கும் ஆலோசனை வழங்கினார்கள். மேலும், எங்கு முஸ்லிம் அல்லாத அரசாங்கங்கள் இருக்கின்றவோ அங்கு குற்ற வழக்குகளை தவிர முஸ்லிம்களின் மற்ற வழக்குகளை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்கு பகரமாக பரஸ்பரம் தங்களுக்குள் இணைந்து தீர்ப்பதற்காகவும் பஞ்சாயத்து அமைப்பை நிறுவுவதின் மீதும் முழுமையான அழுத்தம் கொடுத்தார்கள்.

அன்னார் (ரலி) கூறினார்கள்: அமைதியை நிலைநாட்டுவதற்கு இந்த விஷயம் அவசியமாகும். அதாவது, ஒருவர் மற்றவருடைய மார்க்க விவகாரங்களில் தலையிடக் கூடாது. பரந்த மனப்பான்மையுடன் பிறரை அவர்களின் கொள்கைக்கு ஏற்ப செயல்பட அனுமதிக்க வேண்டும். மேலும், சுயம் தங்களது கொள்கைக்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

ஹுஸூர் (ரலி) அவர்கள் வியாபாரம் மற்றும் தொழில் தொடர்பாக கூறினார்கள்:

வியாபாரம் எப்படிப்பட்ட துறை என்றால், அதிலிருந்து ஏராளமான முஸ்லிம்கள் மிக அதிகமாக கவனமற்று இருக்கின்றனர். மேலும் வியாபார ரீதியில் அவர்கள் இந்துக்களின் அடிமைகளாக ஆகிவிட்டனர்.

அந்த காலத்தில் அவ்வாறு இருந்தனர். தற்போதோ நமக்கு இந்த விஷயம் தென்படுகின்றது. அதாவது உலகின் பெரும் பெரும் பணக்கார நபர்கள் இருக்கின்றனர்; பல்வேறு மார்க்கங்களின் வியாபாரிகள் இருக்கின்றனர். அவர்கள் யூதர்களாக இருக்கட்டும்; கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரியே ; அல்லது வேறு யாராக இருந்தாலும் சரியே ; அவர்களின் அடிமைகளாக இருக்கின்றனர். தற்போது நிலைமைகள் இப்படித்தான் இருக்கின்றன. இன்றைய காலத்தில் நான் கூறியது போன்று, இந்த விவகாரத்தில் அரசாங்கங்கள் மற்றும் வியாபாரிகளின் அடிமைகளாக நாம் ஆகிவருகிறோம். எனவே இதன் பக்கம் முஸ்லிம் அரசாங்கங்கள் கவனம் செலுத்துவதற்கான அவசியம் உள்ளது.

வியாபாரம் மற்றும் கைத்தொழிலிலும் முஸ்லிம்களின் முன்னேற்றத்தின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்துவது அவசியமாகும்.

இறுதியில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள், பரஸ்பர சண்டை சச்சரவுகளை களைந்து பரஸ்பரம் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தின் பக்கம் முஸ்லிம்களுக்கு கவனமூட்டினார்கள். மேலும் கூறினார்கள்:

மீண்டும் ஒருமுறை இந்த விவகாரத்தின் பக்கம் கவனமூட்டியவாறு நான் எனது கட்டுரையை நிறைவு செய்கின்றேன். அதாவது நாம் இந்த விவகாரத்தை நன்றாக புரிந்து கொள்ளவில்லையென்றால் பின்னர் அனைத்து உழைப்பும் வீணாகிவிடும்; மேலும் அனைத்து திட்டங்களும் தோற்றுப் போய்விடும். அதாவது நாம் பரஸ்பரம் ஒருவர் மற்றவரை காஃபிர் என்று கூறிக் கொண்டாலும் அந்நியர்களின் பார்வையில் முஸ்லிம்கள் ஆவோம். மேலும் ஒருவருக்கு ஏற்படும் பாதிப்பு மற்றவருக்கு ஏற்படும் பாதிப்பு ஆகும். எனவே அரசியல் மைதானத்தில் நாம் மார்க்க தீர்ப்புகளை புறந்தள்ளி விட வேண்டும். ஏனெனில், அது அவர்களின் செயல் வட்டத்திற்கு அப்பாற்பட்டதாகும். நீங்கள் எவர்களை முஸ்லிம்களாக கருதுவதில்லையோ அவர்களுடன் நீங்கள் உங்கள் அரசியல் தேவைகளுக்காக இணைந்து பணி செய்ய முடியாது என்று ஒருபோதும் இஸ்லாம் கூறவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இணை வைப்பாளர்களுக்கு எதிரில் யூதர்களுடன் உடன்படிக்கை செய்ய முடியும் என்றால், பின்னர் முஸ்லிம்கள் என்று தங்களை கூறும் பிரிவினருடன் இஸ்லாத்தின் அரசியல் நலனுக்காக மாறாக, இவ்வாறு கூறவேண்டும்; அரசியல் பாதுகாப்பிற்காக இதில் இணைந்து பணி செய்ய முடியாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. நாம் இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றுபட முடியவில்லை என்றால் பின்னர் நிச்சயமாக இதிலிருந்து இந்த விஷயம் நிரூபணமாகும். அதாவது, நமது கருத்துவேறுபாடுகள் இஸ்லாத்திற்கானதல்ல; மாறாக, நமது தனிப்பட்ட விஷயங்களுக்கானதாகும்; நமது நஃப்ஸிற்கானதாகும் என்பது நிரூபணமாகும். அல்லாஹ் நம்மை இந்த பேரிழந்த விஷயத்திலிருந்து பாதுகாப்பானாக!

(ஆல் முஸ்லிம் பார்டீஸ் கான்ஃபரன்ஸின் நிகழ்ச்சிகள் குறித்து ஒரு பார்வை என்ற நூல் - அன்வாருல் உலூம், பாகம் 9, பக்கம் 8 - 10)

பாகிஸ்தான் மற்றும் சில முஸ்லிம் நாடுகளில் பொதுவாகவே இதே சூழ்நிலைதான் நிலவுகின்றது. குறிப்பாக அஹ்மதிகளை குறித்து, இவர்கள் காஃபிர்கள் ஆவர் என்ற சிந்தனை இருக்கின்றது. பொதுவாக ஒவ்வொரு பிரிவும் மற்ற பிரிவை காஃபிர் என்று கூறுகின்றது. முஸ்லிம் அல்லாதோர் உலகில் இதன் காரணமாகவே உருவாகி வருகின்ற தவறான தாக்கம் முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. எனவே இந்த கருத்தை இன்றும் முஸ்லிம் அரசாங்கங்களும், முஸ்லிம்களும் புரிவதற்கு அவசியம் இருக்கின்றது.

இந்தியாவின் நிலைமைகள் தொடர்பாக அதாவது இந்தியாவும், பாகிஸ்தானும் ஒன்றாக இருந்தபோது ஒரு வட்ட மேஜை மாநாடு நடைபெற்றது. மேலும் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்திற்கான கேள்வி அதில் எழுந்தது. ஆங்கிலேய அரசாங்கம் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்குவதை ஆய்வு செய்வதற்காக ஒரு கமிஷன் அமைத்திருந்தது. அந்த கமிஷன் ஒவ்வொரு பத்தாண்டிற்குப் பிறகும் எந்த அளவிற்கு மக்களுக்கு இந்த அதிகாரத்தை வழங்க முடியும்? அதாவது அவர்கள் தனியாக அரசாங்கத்தை நிறுவும் பொருட்டு ஆய்வு செய்யும். அதன் முதல் தலைவராக ஓர் ஆங்கிலேய பேரஸ்டர் இருந்தார். இந்த கமிஷனின் தலைவராக ஸர்ஜான் சைமன் என்ற பெயர் கொண்டவர் இருந்தார்.

(இந்திய முஸ்லிம்களின் சோதனைக்கான காலம், அன்வாருல் உலூம், பாகம் 10, பக்கம் 2 - 3 )

எவ்வாறிருப்பினும், இந்த கமிஷன் மற்றும் அதன் தீர்ப்புகளைக் குறித்து பல்வேறு நேரங்களில் விவாதிக்கப்பட்டு

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

வந்துளது. மேலும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பல்வேறு நேரங்களில் வழிகாட்டல் வழங்கியவாறு தமது விரிவான கருத்துகளை முன்வைத்துள்ளார்கள். மேலும், முஸ்லிம்களுக்கு வழிகாட்டியும் இருக்கின்றார்கள். இது தொடர்பாக ஒரு வட்ட மேஜை மாநாடு நடைபெற்றது. அதன் விளக்கம் நமது வரலாற்றில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தொடர்பாகவும் கிடைக்கின்றது.

ஆங்கிலேயே அரசாங்கம் அமைத்த சைமன் கமிஷனின் அறிக்கை இந்தியர்களின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்யவில்லை. எனவே அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தகுந்தது அல்ல. இந்த நிலைமைகளில் அரசாங்கம் சார்பாக வட்ட மேஜை மாநாடு நடத்துவதாக அறிவிக்கப்பட்டது.

இதன் விளக்கம் இவ்வாறாகும்:

பிரிட்டன் மற்றும் இந்தியாவின் பிரதிநிதிகள் ஓர் இடத்தில் ஒன்றுகூடி இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்தைக் குறித்து ஆராய்ந்து சிந்திக்க வேண்டும் (என்பதற்காகவே இந்த மாநாடு கூட்டப்படுகின்றது). இந்த சந்தர்ப்பத்தில் ஹுஸுர்(ரலி) அவர்கள் முஸ்லிம்களின் வழிகாட்டலுக்காக உடனடியாக இந்த கட்டுரையை எழுதினார்கள். மேலும், நீங்கள் உங்களுக்கிடையிலான பரஸ்பர பிரிவினை மற்றும் கருத்து வேறுபாடுகளை கைவிட்டு விடுங்கள்; மேலும் சமுதாய நலனுக்காக ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுடன் செயல்படுங்கள்; இந்த வழிமுறையினால் மட்டுமே நீங்கள் எதிரி சமுதாயத்தை எதிர்கொண்டவாறு உங்களது உரிமைகளை பெறுவதில் வெற்றி பெற முடியும் என்று அவர்களுக்கு அறிவுரை நல்கினார்கள்.

சமுதாயத்தின் பிரதிநிதித்துவத்திற்கான உரிமையை நிறைவேற்றக் கூடிய பிரதிநிதிகள் மாநாட்டிற்கு செல்ல வேண்டும் என்பதற்காக முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் அரசியல் கட்சிகளின் ஆலோசனையுடன் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வேண்டும்; அப்போதுதான் மாநாட்டின் தீர்மானங்களை மக்கள் உள்ளத்தால் ஒப்புக் கொள்வார்கள் என்று ஹுஸுர் (ரலி) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கும் ஆலோசனை வழங்கினார்கள்.

முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக ஹுஸுர் (ரலி) கூறினார்கள்:

என்னைப் பொருத்தவரை ஆல் முஸ்லிம் பார்டீஸ் கான்ஃபிரன்ஸிற்கு பணிக்கான நேரம் இப்போதுதான் வந்துள்ளது. முஸ்லிம்களின் கோரிக்கைகள் இவையாகும் என்று இந்த விஷயத்தை வெளியிட்டு விடுவது மட்டும் போதுமானதல்ல. இந்தக் கோரிக்கைகளை புறக்கணித்துவிட்ட மக்கள் வட்ட மேஜை மாநாட்டிற்கு சென்றால் பின்னர் ஆல்பார்டீஸ் கான்ஃபிரன்ஸின் தீர்மானங்களுக்கு எந்த மதிப்பும் இருக்காது. எனவே, ஒரு பக்கம் தவறான (பிரதிநிதிகளை) தேர்ந்தெடுப்பதன் தீய விளைவுகளை அரசாங்கத்திற்கு நீங்கள் தெரியப்படுத்த வேண்டும். மற்றொரு பக்கம், பொதுமக்களுக்கு இந்த அபாயத்தைக் குறித்து தெரியப்படுத்த வேண்டும். இதற்கான நேரம் இதுவே ஆகும். மேலும், முஸ்லிம்களின் பிரதிநிதிகளுக்கான முடிவு முஸ்லிம்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அவர்களின் முக்கிய அரசியல் அமைப்புகள் மூலமாக நடைபெறும் வரை அமைதியாக இருக்கக் கூடாது.

(வட்ட மேஜை மாநாடு மற்றும் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம், அன்வாருல் உலூம், தொகுதி 11, பக்கம் 13 - 14)

இந்த ஆலோசனையானது அந்த காலத்து நிலைமைகளுக்கு ஏற்ப ஏராளமான வட்டாரங்களில் மிகவும் அக்கறையுடன் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அடுத்து, அந்த காலத்தில் இந்தியாவில் நிலவிய அரசியல் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் தொடர்பாக அன்னார் (ரலி) கட்டுரை எழுதினார்கள். இது தொடர்பாக அன்னார் கட்டுரையில் அக்காலத்தில் நிலைமைகளுக்கான தீர்வுகளை முன்வைத்தார்கள். சைமன் கமிஷனுடைய அறிக்கை அச்சிடப்பட்ட சிறிது நேரத்திற்குப் பிறகு இந்த அறிக்கையைப் பற்றியும் பேசப்பட்டது.

பிரிட்டானிய அரசாங்கம் லண்டனில் வட்ட மேஜை மாநாடு நடத்துவதற்கு எண்ணம் கொண்டுள்ளது. (ஏற்கனவே கூறப்பட்டது போன்று) இந்தியாவின் அரசியலை மேம்படுத்துவதற்கான பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து எதிர்காலத்திற்கான செயல்திட்டத்தை வகுக்க வேண்டும் என்பது இந்த மாநாட்டின் நோக்கம் ஆகும். சைமன் கமிஷன் முழுமையாக முஸ்லிம்களின் உரிமைகளை கருத்தில் கொள்ளவில்லை. எனவே ஹுஸுர் (ரலி) அவர்களுக்கு இந்த அச்சம் இருந்தது. மேலும், எதிர்காலத்தில் முஸ்லிம்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு விடக் கூடாது என்று ஹுஸுர் (ரலி) அவர்கள் விரும்பினார்கள். எனவே ஹுஸுர் (ரலி) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் சைமன் கமிஷன் அறிக்கையின் மீது கருத்து தெரிவித்து அதன் குறைகளை பகிரங்கப்படுத்துவதை ஹுஸுர் (ரலி) அவர்கள் உகந்ததாக கருதினார்கள். மேலும், எதிர்காலத்தில் எல்லா சமுதாயமும் சமாதானம் மற்றும் சாந்தியுடன் அமைதியாக வாழும் வகையிலான தீர்வுகளை இந்தியாவின் பிரச்சனைகளுக்கு ஹுஸுர் (ரலி) அவர்கள் முன்வைக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

ஆக, ஹுஸுர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஒரு மார்க்கவாதியாக இருப்பதன் அடிப்படையில், இரவு பகலாக இதே பணியில் மூழ்கிக் கிடக்கும் அந்த மக்களைப் போன்று எனக்கு நாட்டின் அரசியல் விவகாரங்களில் தொடர்பு கிடையாது. ஆயினும், சமாதானம் மற்றும் சாந்தியை உருவாக்குவது தொடர்பாக எனக்கு அதிக பொறுப்பு இருக்கின்றது. மேலும், உலகியல் மும்முரங்களில் இருந்து விலகி இருப்பதன் காரணமாக நான் அநேகமாக பல விவகாரங்களின் ஆழம் வரை மிக எளிதாக செல்ல முடியும் என்பது எனது எண்ணமாகும். இந்தப் போரில் ஒருபக்கம் அல்லது மற்றொரு பக்கத்திலிருந்து கலந்து கொண்டிருக்கின்ற அந்த மக்களைக் காட்டிலும் ...

எனவே தற்போது வட்ட மேஜை மாநாட்டிற்கான அறிவிப்பு செய்யப்பட்டிருப்பதன் காரணமாக மக்களின் கவனம் இந்தியாவின் பிரச்சனைகளுக்கான தீர்வுகளின் பக்கம் திரும்பியிருக்கின்றது.

அந்த காலத்தில் இது மாபெரும் விவகாரமாக இருந்தது.

எனது கருத்துகளை இரண்டு நாடுகளையும் சார்ந்த காழ்ப்புணர்ச்சியற்ற மக்களுக்கு முன்னால் வைத்து விடுவதையே நான் உகந்ததாக கருதுகிறேன்.

ஹுஸுர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் கோரிக்கைகளை குறித்து போதுமான அளவில் தமது கருத்தில் விவாதித்துள்ளார்கள். மேலும் அவர்களின் பகுத்தறிவை மேம்படுத்தியுள்ளார்கள். அத்துடன் அன்னார் (ரலி) இந்தியாவிற்கான அரசியல் பிரச்சனைக்கு மிகவும் அறிவார்ந்த மற்றும் மனதிற்கு ஆறுதல் நல்கக் கூடிய தீர்வுகளை முன்வைத்தார்கள். இந்த சுருக்கமான மற்றும் அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கிய கருத்துகளின் ஆங்கில பதிப்பும் உடனடியாக அச்சிடப்பட்டு இங்கிலாந்திற்கு எட்ட வைக்கப்பட்டது. வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் அதனை படித்து பயனடைந்து கொள்ளட்டும் என்று அவ்வாறு செய்யப்பட்டது. முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இதனால் பயன் கிடைத்தது. ஆக, அவர்கள் முதல் முறையாக ஒருமித்த கருத்துடன் வெற்றிகரமாக தங்களது கோரிக்கைகளை மாநாட்டில் முன்வைத்தார்கள். அந்த காலத்தில் பயன் கிடைத்தது. அதனால் இங்கிலாந்தின் அறிஞர் பெருமக்கள் மீது ஆழமான தாக்கம் ஏற்பட்டது. மேலும் அவர்கள் இந்தியாவில் முஸ்லிம்களின் சிறப்பு அந்தஸ்தை ஒப்புக் கொண்டவாறு அவர்களின் கோரிக்கைகளின் அறிவார்ந்த மற்றும் நன்மையின் அம்சங்களை ஒப்புக் கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி விட்டனர்.

( இந்தியாவின் தற்போதைய அரசியல் பிரச்சனைக்கான தீர்வு, அன்வாருல் உலூம், தொகுதி 4, பக்கம் 18 - 19)

அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் பல நிகழ்வுகள் பதியப்பட்டுள்ளன. நான் கூறியது போன்று இந்த கருத்து இரண்டு தரப்பிலும் மிகவும் வரவேற்பை பெற்றது. மிகவும் கவனத்துடன் படிக்கப்பட்டது. மேலும் அதன் சில உதாரணங்களை முன்வைக்கின்றேன்:

உத்திரபிரதேசத்தின் முன்னாள் கவர்னர் லார்ட் மேஸ்டன் (Meston) கூறுகின்றார்கள்:

தாங்கள் எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமுடைய மிகவும் மனம்கவர் நூலை அனுப்பி தந்துள்ளீர்கள். அதற்காக நான் தங்களுக்கு மிகவும் நன்றி செலுத்துகின்றேன்.

நூலை அனுப்பியவரிடம் கூறுகின்றார்கள்.

நான் இதற்கு முன்னரும் அன்னாருடைய சில நூல்களை ஆர்வத்துடன் படித்துள்ளேன். இந்த நூலைப் படிப்பது எனது மகிழ்ச்சிக்கும், நன்மைக்கும் காரணியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

(தாரீகே அஹ்மதிய்யத், தொகுதி 5, பக்கம் 214)

பாராளுமன்ற உறுப்பினர் லெஃப்டினன்ட் கமெண்டர் கென்வொர்தீ (Kenworthy) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்தியாவின் அரசியல் பிரச்சனைக்கான தீர்வு என்ற நூலை அனுப்பிக் கொடுத்ததற்கு உங்களுக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன். நான் அதனை மிகவும் ஆர்வமாக படித்து இருக்கின்றனே.

(தாரீகே அஹ்மதிய்யத், தொகுதி 5, பக்கம் 214)

உத்திரபிரதேசத்தின் கவர்னரும், பஞ்சாபின் முன்னாள் கவர்னருமான மிஸ்டர் மால்கம் ஹெய்லீ (MALCOLM Hailey) அவர்கள் எழுதுகின்றார்கள்;

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் நூலை எனது பெயரில் நீங்கள்

எனக்கு அனுப்பியதற்காக நான் தங்களுக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன். நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிலைமைகளை நன்றாக அறிவேன். மேலும் அதன் ஆன்மாவை நன்றாக புரிந்திருக்கின்றேன். மேலும் கண்ணியத்துடன் அதனை பார்க்கின்றேன். இமாம் அவர்கள் அந்த ஜமாஅத்தை அழைத்தக் கொண்டு இந்தியாவின் முக்கிய பிரச்சனைகளின் தீர்விற்காக பணி செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நூல் எனக்கு மிகவும் பயனளிக்கும் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. மேலும், நான் இதனை ஆர்வத்துடன் படிப்பேன்.

(தாரீகே அஹ்மதிய்யத், தொகுதி 5, பக்கம் 215)

அடுத்து, ஸர்ஹோன் மில்லர் (SIR. Hone O millar) கூறுகின்றார்கள்: இந்தியாவின் பிரச்சனைக்கு தீர்விற்காக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் வழங்கிய ஆலோசனைகள் இடம் பெற்றுள்ள இந்த சிறிய நூலை அனுப்பியதற்காக நான் உளமார தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். சைமன் கமிஷனின் அறிக்கைகளை மிகவும் விரிவாக விமர்சிக்கக் கூடிய இந்த ஒரு நூல் மட்டுமே எனது பார்வையில் பட்டுள்ளது. நான் அதன் விளக்கங்களை குறித்து எதுவும் கூறமாட்டேன். அது தொடர்பாக கருத்து வேறுபாடு கொள்வது என்பது ஒரு கட்டாய விவகாரம் ஆகும். ஆனால், நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் தமது ஜமாஅத்தின் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ள அந்த தூய்மை, அறிவு மற்றும் விளக்கத்தை பாராட்டுகிறேன். மேலும், ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் ஸாஹிப் அவர்களின் உயர்ந்த சிந்தனைகளால் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன்.

(தாரீகே அஹ்திய்யத், தொகுதி 5, பக்கம் 215)

அடுத்து, ஆனரபிள் பீட்டர்சன் ஸி எஸ் ஐ ஸி ஐ ஓ (Peterson) அவர்கள் கூறுகின்றார்கள்:

''இந்தியாவின் அரசியல் பிரச்சனைக்கான தீர்வு" என்ற நூலை எனக்கு அனுப்பியதற்கு மிக்க நன்றி! எனக்கு இன்னும் இதனை ((படித்து) முடிக்க நேரம் கிடைக்கவில்லை. சில நாட்களில் இதனை நிறைவு செய்து விடுவேன் என்று நான் நம்புகிறேன். ஆனால், நான் படித்த வரை இந்த அளவிற்கு விஷயம் வெளிப்பட்டிருக்கின்றது. அதாவது, இந்த நூல் தற்போதைய சிக்கலை தீர்த்து வைப்பதற்கு ஓர் உளப்பூர்வமான மற்றும் மதிக்கத் தகுந்த முயற்சி ஆகும். முஸ்லிம்களின் கருத்து இதில் மிகவும் விளக்கமாக முன்வைக்கப்பட்டுள்ளது. நான் தங்களை விரைவில் சந்திப்பேன் என்று நான் நம்புகிறேன்.

(தாரீகே அஹ்மதிய்யத், பாகம் 5, பக்கம் 217)

டாக்டர் ஸியாவுத்தீன் ஸாஹிப் என்பவர் அலிகட் நகரத்தை சேர்ந்தவர் ஆவார்கள். இவர்கள் கூறுகின்றார்கள்:

நான் அன்னாரின் புத்தகத்தை மிகவும் ஆர்வத்துடன் படித்தேன். இதனை ஐரோப்பாவில் மிகவும் அதிகமாக அச்சிட்டு வெளியிடுங்கள்; மேலும் பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு பிரதியை நிச்சயம் அனுப்பி வையுங்கள்; மேலும் இங்கிலாந்தின் எல்லா பத்திரிகை ஆசிரியர்களுக்கும் ஒவ்வொரு பிரதியை அனுப்பி வையுங்கள் என்றும் நான் தங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். இந்த நூலை இந்தியாவைக் காட்டிலும் இங்கிலாந்தில் அச்சிட்டு வெளியிடுவது அவசியமாகும். தாங்கள் இஸ்லாத்திற்கு மிகவும் முக்கியமான ஒரு தொண்டினை ஆற்றியுள்ளீர்கள்.

(தாரீகே அஹ்திய்யத், தொகுதி 5, பக்கம் 218)

பாருங்கள்! இஸ்லாத்திற்கு தொண்டாற்றுகின்றார்கள் என்று இந்த அஹ்மதி அல்லாதவர் எழுதுகின்றார். மேலும், அஹ்மதி முஸ்லிம் கிடையாது என்று அஹ்மதி அல்லாதோர் இங்கு கூறுகின்றனர்.

சேட் ஹாஜி அப்துல்லாஹ் ஹாரூன் ஸாஹிப் எம்.எல்.ஏ கராச்சி கூறுகின்றார்கள்:

எனது கருத்தின்படி, அரசியல் பாடம் தொடர்பாக எந்த அளவிற்கு இந்தியாவில் புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளனவோ அந்த நூல்களில் இந்தியாவின் அரசியல் பிரச்சனைக்கு தீர்வு என்ற நூல் சிறந்த நூல் ஆகும்.

(தாரீகே அஹ்மதிய்யத், தொகுதி 5, பக்கம் 218)

அல்லாமா டாக்டர் ஸர் முஹம்மது இக்பால் எழுதுகின்றார்கள்:

கருத்தின் சில இடங்களை நான் படித்தேன். மிகவும் சிறப்பாகவும், சுருக்கமாகவும் அமைந்திருக்கின்றது.

(தாரீகே அஹ்மதிய்யத், தொகுதி 6, பக்கம் 218)

இன்கலாப் லாஹூர் என்ற பத்திரிகை இவ்வாறு எழுதியது:

ஜனாப் மிர்ஸா ஸாஹிப் இந்த கருத்தின் மூலம் முஸ்லிம்களுக்கு மாபெரும் தொண்டாற்றி இருக்கின்றார்கள். மிர்ஸா ஸாஹிப் செய்துள்ள இந்த பணியானது பெரும் பெரும் இஸ்லாமிய ஜமாஅத்துகளின் பணியாக இருந்தது.

(தாரீகே அஹ்மதிய்யத், தொகுதி 5, பக்கம் 218)

ஸியாஸத் லாஹூர் என்ற பத்திரிகை இவ்வாறு எழுதியுள்ளது:

மார்க்க கருத்து வேறுபாடுகளை விட்டு விட்டு பார்த்தால் பின்னர் ஜனாப் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் ஸாஹிப் தஸ்னீஃப் மற்றும் தாலீஃப் மைதானத்தில் செய்திருக்கின்ற பணி என்பது முக்கியத்துவம் மற்றும் பயன் என்ற ரீதியில் எல்லா வகையிலும் பாராட்டுதலுக்கு தகுதிவாய்ந்தது ஆகும். அரசியலில் தங்களது ஜமாஅத்தை பாமர முஸ்லிம்களின் அம்சங்களின் அடிப்படையில் வழிநடத்துவதற்கு அன்னார் என்ன செயல் திட்டத்தை துவக்கி அதனை தமது தலைமையில் வெற்றிகரமாக ஆக்கியுள்ளார்களோ அதுவும் நீதியுடன் செயல்படும் இயல்பு படைத்த அனைத்து முஸ்லிம்கள் மற்றும் உண்மையைத் தேடும் மனிதனின் பார்வையில் மிகுந்த பாராட்டுதலை பெற்றுள்ளது. அன்னாருடைய அரசியல் அகப்பார்வையை ஒரு காலகட்டமே ஒப்புக் கொண்டிருக்கின்றது.

அந்த பத்திரிகை கூறுகின்றது: அன்னாரின் அரசியல் அகப்பார்வையை ஒரு காலகட்டமே ஒப்புக் கொண்டிருக்கின்றது. மேலும் நேருவின் அறிக்கைக்கு எதிராக முஸ்லிம்களை ஒன்றுகூட்டுவதிலும், சைமன் கமிஷனுக்கு முன்னால் முஸ்லிம்களின் கருத்தை முன்வைத்ததிலும், நிகழ்கால விவகாரங்களில் இஸ்லாமிய கண்ணோட்டத்தை ஆதாரப்பூர்வமான விவாதத்துடனும், முஸ்லிம்களின் உரிமைகளை ஆதாரப்பூர்வமான நூல்களை வெளியிடும் வடிவத்திலும் அன்னார் (ரலி) மிகவும் பாராட்டுதலுக்குரிய பணியை செய்திருக்கின்றார்கள். விவாதிக்கப்படும் சைமன் அறிக்கை எனும் நூலை குறித்து அன்னார் விமர்சனம் செய்திருக்கின்றார்கள். அது ஆங்கில மொழியில் எழுதப்பட்டிருக்கின்றது. அதனை படிப்பதன் மூலமாக அன்னாரின் விசாலமான அறிவை அனுமானித்துக் கொள்ள முடிகின்றது. அன்னார் விஷயத்தை எடுத்துரைக்கும் தொனி மிகவும் எளிமையாகவும், எதிர்தரப்பை ஒப்புக் கொள்ளக் கூடியவராக ஆக்கும் வகையிலும் உள்ளது. அன்னாரின் (ரலி) மொழி மிகவும் எளிதானதாக இருக்கின்றது. (தாரீகே அஹ்மதிய்யத், தொகுதி 5, பக்கம் 219)

இது சில கருத்துகளாக இருந்தன.

அடுத்து உலகின் தற்போதைய நிம்மதியின்மைக்கு இஸ்லாம் என்ன சிகிச்சையை முன்வைக்கின்றது?

இது தொடர்பாகவும் அன்னார் (ரலி) எழுதியுள்ளார்கள். உலகளாவிய அமைதியைக் குறித்து அன்னார் நிகழ்த்திய சொற்பொழிவுகளை சுருக்கமாக எடுத்துரைக்கின்றேன்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் உலகளாவிய அமைதியை கருத்தில் கொண்டவாறு 1946, அக்டோபர் 9 அன்று மாலை 5 மணியளவில் 8, பார்க் ரோட் டில்லியின் பரந்த வளாகத்தில் இந்த ஞானம் நிறைந்த சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அந்த சொற்பொழிவை கேட்பதற்காக பல நூறு அஹ்மதி அல்லாதோர் மற்றும் முஸ்லிம் அல்லாத கண்ணிய மிகு விருந்தினர்கள் வருகை தந்திருந்தார்கள். மேலும், அவர்கள் மிகுந்த கவனத்துடனும் அமைதியுடனும் ஹுஸூர் (ரலி) அவர்களின் சொற்பொழிவை செவியுற்றார்கள். இந்த சொற்பொழிவு முதன் முறையாக ஏப்ரல் 15, 1961 அன்று அல்ஃபஸ்ல் பத்திரிகையில் வெளியானது.

எவ்வாறிருப்பினும், இந்த சொற்பொழிவைக் குறித்து தீஜ் டில்லி என்ற பத்திரிகை அக்டோபர் 14, 1946 -அன்று தனது இதழின் வெளியீட்டில் கீழ்கண்டவாறு செய்தி வெளியிட்டது:

அஹ்மதிகளின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் ஸாஹிப் சொற்பொழிவு நிகழ்த்தியாவறு இவ்வாறு கூறினார்கள்:

அமைதி மற்றும் சாந்திக்கான விவகாரம் என்பது மனிதன் எவ்வளவு பழமையானவனோ அவ்வளவு அந்த விவகாரமும் பழமையானதாகும். ஏனெனில், மனித இயல்புடன் அதற்கு மிகவும் ஆழமான தொடர்பு இருக்கின்றது. அதனை நிலைநாட்டுவது நோக்கம் என்றால் பின்னர் அதற்கு பகைமையுணர்வு மற்றும் வெறுப்பை களைய வேண்டும். இந்த விவகாரம் அரசியல் விவகாரம் அல்ல. மாறாக, ஒழுக்கம் சம்பந்தப்பட்ட விவகாரமாகும். நாம் இறைவனுடைய இறைமையை அறிந்திருந்தால். மேலும் உணவின் மீதான நேசம் மற்றும் பேராசை போன்றவற்றை விட்டுவிட்டால் பின்னர் அதன் பிறகு நம்மிடத்தில் பகைமை மற்றும் பேராசைக்கு பகரமாக சகோதரத்துவம் மற்றும் நேசத்திற்கான உணர்வுகள் தோன்றிவிட முடியும். மார்க்க உலகின் கருத்து வேறுபாடுகள் முடிவுக்கு வந்து விட

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

முடியும். நிபந்தனை என்னவென்றால், நாம் ஒருவர் மற்றவரின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க கற்க வேண்டும். மேலும், நம்முள் சகிப்புத்தன்மைக்கான ஆற்றலை உருவாக்க வேண்டும். எவ்வாறு மார்க்க விவகாரங்களில் பொறுமைக்கான அவசியம் இருக்கின்றதோ சரியாக அதேபோன்று உலக விவகாரங்களிலும் அதனை மேற்கொள்வது அவசியமாகும்.

அந்தக் காலத்தில் முஸ்லிம்கள் மற்றும் இந்துக்களுக்கிடையிலும் விவகாரம் இருந்தது. கிறிஸ்தவர்களுடனும் விவகாரம் இருந்தது.

கூறினார்கள்: நாம் இனம், நிற சண்டை சச்சரவுகளை களைந்து உலகளாவிய சகோதரத்துவத்திற்கான உணர்வை உருவாக்க வேண்டும்.

(உலகின் தற்போதைய நிம்மதியின்மைக்கு இஸ்லாம் என்ன சிகிச்சை வழங்குகின்றது? என்ற நூல் - அன்வாருல் உலூம், தொகுதி 18, பக்கம் 11 - 12)

இதுவோ இந்தக் கட்டுரையின் சுருக்கமான அறிமுகமாக இருக்கின்றது.

அடுத்து ஒரு கட்டுரை, அநீதியிழைக்கப்பட்ட சமுதாயம் நம்மை அடித்தாலும் அல்லது துன்பம் கொடுத்தாலும் சரியே நாம் அதற்கு உதவி செய்வது நமது கடமையாகும் என்ற கருத்தின் மீது செய்யப்பட்ட ஆட்சேபனைக்கு அன்னார் (ரலி) இவ்வாறு எழுதினார்கள்:

டில்லி பத்திரிகையின் விமர்சனத்தைக் குறித்து இந்த கருத்து கூறப்பட்டிருந்தது.

டில்லி பத்திரிகை இவ்வாறு எழுதியிருந்தது: அதாவது, அஹ்மதிகள் பாகிஸ்தானிற்கு ஆதரவு கொடுத்து வருகின்றனர். ஆனால், அவர்களுடன் மற்ற முஸ்லிம்களோ நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லை.

முஸ்லிம்களோ அஹ்மதிகளுடன் நல்ல முறையில் நடப்பதில்லை ; அவ்வாறிருக்க அஹ்மதிகள் ஏன் பாகிஸ்தானிற்கு ஆதரவு அளித்து வருகின்றனர்? என்று கூறி இந்த பத்திரிகை அஹ்மதிகளை தூண்டி விடுகின்றது.

அடுத்து அது எழுதுகின்றது: பாகிஸ்தான் உருவாகி விட்டால் பின்னர் காபூலில் அஹ்மதிகளுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்பட்டதோ அதேபோன்றே முஸ்லிம்கள் அவர்களுடன் நடந்து கொள்வர்; அப்போது, எங்களை இந்தியாவுடன் இணைத்துக் கொள்ளுங்கள் என்று அஹ்மதிகள் கூறுவர்.

இந்த பத்திரிகை இந்த கருத்தை வெளியிட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மே 16, 1947 அன்று மஹ்ரிப் தொழுகைக்குப் பிறகு இது குறித்து கருத்து தெரிவித்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

அநீதியிழைக்கப்பட்ட சமுதாயம் நம்மை அடித்தாலும் அல்லது துன்பம் கொடுத்தாலும் சரியே! நாம் அதற்கு உதவி செய்வது நமது கடமையாகும். மேலும் அன்னார் (ரலி) கூறினார்கள்: நமது எதிரி நமக்கு அநீதியிழைத்தாலும் கூட நாம் நீதியுடன் நடந்து கொள்வோம். ஹுஸூர் (ரலி) அவர்களின் இந்த பிரசுரம் காதியானிலும் நூல் வடிவில் வெளியிடப்பட்டது. (அநீதியிழைக்கப்பட்ட சமுதாயம் நம்மை அடித்தாலும் அல்லது துன்பம் கொடுத்தாலும் சரியே நாம் அதற்கு உதவி செய்வது நமது கடமையாகும் என்ற நூல் - அன்வாருல் உலூம், தொகுதி 18, பக்கம் 19)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பாகிஸ்தானுடன் இணைவதற்கு ஏன் ஆதரவு கொடுத்தார்கள்? என்று இன்றைய நாட்களிலும் சில மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். அதற்கு, இந்த சொற்பொழிவு பதிலாகும். அந்த காலத்தின் நிலைமைகளில் முஸ்லிம்களுக்கு உதவி செய்வது அவசியமாக இருந்தது. மேலும் ஜமாஅத் எப்போதும் முஸ்லிம்களுக்கு உதவி செய்வதில் முதல் வரிசையில் இருக்கின்றது.

ஜமாஅத்தின் மீது இந்த அநீதி நிகழும் என்பதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் மறுக்கவில்லை.

அன்னார் (ரலி) கூறினார்கள்: என்ன நிகழ்ந்தாலும், முஸ்லிம்களுக்கு தற்போது உதவி செய்வதற்கான தேவை இருக்கின்றது. மேலும், அஹ்மதிகள் அவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். ஏனெனில் நாம் முஸ்லிம்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும்.

பாகிஸ்தானின் எதிர்காலம் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பாகிஸ்தான் நாடாக உருவான பிறகு பஞ்சாபின் தலைநகரம் லாஹுரில் பாகிஸ்தானின் எதிர்காலம் என்ற தலைப்பில் அகப்பார்வை மிக்க சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அதில் லாஹுருடைய பெரும் பெரும் அறிஞர் பெருமக்களும், கல்வியாளர்களும் கலந்து கொண்டனர். மேலும், இந்த சொற்பொழிவுகளில் அவர்கள் தங்களது விருப்பத்தை வெளிப்படுத்தினர். முதல் ஐந்து சொற்பொழிவுகள் மீனாரட்ஹால் லாஹுரிலும், ஆறாவது சொற்பொழிவு லாஹுர் யூனிவர்சிட்டி ஹாலிலும் நிகழ்த்தினார்கள். கூறுகின்றார்கள்:

டிசம்பர் 7, 1947 அன்று, மீனாரட்ஹால் லாஹுர் என்ற இடத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் அன்னார் (ரலி) கூறினார்கள். நேரத்தின் பற்றாகுறையின் காரணமாக இந்த கட்டுரையின் பல பகுதிகள் எடுத்துரைக்கப்படுவதிலிருந்து விடுபட்டு விட்டன. எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தமது நினைவாற்றலின் படி, இந்த கட்டுரையை பொது பயன்பாட்டிற்காக பின்னர் அல்ஃபஸ்ல் பத்திரிகையிலும் வெளியிட்டார்கள். அது டிசம்பர் 9, 1948 அன்று லாஹுரில் இருந்து வெளியாகி வந்த அல்ஃபஸ்ல் தினசரி நாளிதழில் வெளியானது. ஹுஸூர் (ரலி) அவர்கள் தமது இந்த சொற்பொழிவில் தாவரம், விவசாயம், மனிதவளம், கனிம வளம் போன்றவற்றின் அடிப்படையில் பாகிஸ்தானை எப்படி முன்னேற்ற முடியும்? அதற்கான பொன்னான வழிமுறைகளை எடுத்துரைத்தார்கள். திட்டங்களையும், ஆலோசனைகளையும் நல்கினார்கள்.

(பாகிஸ்தானின் எதிர்காலம் என்ற நூல் - அன்வாருல் உலூம், தொகுதி 19, பக்கம் 8)

இந்த சொற்பொழிவு மிகவும் பிரபல்யம் பெற்றது.

"இஸ்லாமிய அரசியலமைப்பு அல்லது இஸ்லாமிய அரசியலமைப்புச் சட்டம்" - இது தொடர்பாக அன்னார் (ரலி) தமது கருத்துகளை வெளிப்படுத்தினார்கள். காதியானிலிருந்து லாஹுருக்கு ஹிஜ்ரத் செய்து சென்றதற்குப் பிறகு "பாகிஸ்தானின் எதிர்காலம்" என்ற தலைப்பில் அன்னார்(ரலி) ஆற்றிய உரைகளில் இந்த உரையானது இறுதி உரையாகும். முன்னர் கூறப்பட்டது போன்று, ஹுஸூர் (ரலி) அவர்கள் லாஹுர் யூனிவர்சிட்டி ஹாலில் "இஸ்லாமிய அரசியலமைப்பு அல்லது இஸ்லாமிய அரசியலமைப்புச் சட்டம்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். இந்த சொற்பொழிவு பொது பயன்பாட்டிற்காக அந்த நேரத்தில், பிப்ரவரி 18, 1948 அன்று ஒரு ஃபம்லட் வடிவில் வெளியிடப்பட்டது. மேலும், தற்போதும் கூட அது அன்வாருல் உலூம், தொகுதி 19-ல் இடம் பெற்றுள்ளது. இந்த செற்பொழிவில் இஸ்லாமிய அரசியலமைப்பை விவரித்தவாறு பாகிஸ்தானில் எந்த வகையான சட்டம் அல்லது அரசியலமைப்பை அமல்படுத்த வேண்டும்? என்ற அம்சத்தின் மீது ஒளிபாய்ச்சினார்கள்.

ஆக, அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

எனவே பாகிஸ்தான் அரசியலமைப்புச் சட்டத்தில் பெரும்பான்மை மிக்கவர்களாக இருக்கும் முஸ்லிம்கள் இந்த சட்டத்தை நிறைவேற்றிவிட்டால் அதாவது பாகிஸ்தானின் பகுதிகளில் முஸ்லிம்களுக்கு திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்திற்கு ஏற்ப சட்டங்கள் உருவாக்கப்படும் என்ற சட்டத்தை நிறைவேற்றி விட்டால் அதற்கு எதிராக சட்டத்தை இயற்றுவது ஆகுமானதாக இருக்காது. அப்போது அரசாங்கத்திற்கான அரசியலமைப்புச் சட்டம் முற்றிலும் இஸ்லாமிய சட்டமாக இருக்காது. ஏனெனில், அது நிகழ முடியாது. ஆனால், அரசாங்கத்தின் செயல்வழிமுறை இஸ்லாமிய வழிமுறையாக ஆகிவிடும். முஸ்லிம்கள் தொடர்பாக அவர்களின் சட்டமும் இஸ்லாமிய சட்டமாக ஆகிவிடும். மேலும், இதனையே இஸ்லாமும் எதிர்பார்க்கின்றது. இந்துக்களும், கிறிஸ்தவர்களும், சீக்கியர்களும் இஸ்லாத்தின் படி அமல் செய்ய வைக்க வேண்டும் என்று இஸ்லாம் ஒருபோதும் கூறவில்லை. மாறாக, அது இதற்கு முற்றிலும் எதிரானதாக இருக்கின்றது.

(இஸ்லாமிய அரசியலமைப்பு அல்லது இஸ்லாமிய அரசியலமைப்புச் சட்டம் என்ற நூல், அன்வாருல் உலூம், தொகுதி 19, பக்கம் 10- 11)

இஸ்லாமோ எல்லா மார்க்கத்திற்கும், அனைவருக்கும் சுதந்திரம் வழங்குகின்றது.

இன்று இந்த மக்கள் கூறுகின்றனர்: இஸ்லாமிய நாட்டில் இஸ்லாமிய அரசியலமைப்பும், சட்டமும் இருக்கின்றது. இதற்கான துவக்கம் மற்றும் ஆலோசனையோ ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் வழங்கினார்கள். ஆனால், செயல்ரீதியாக இஸ்லாத்தின் பெயரால் அநீதியிழைக்கப்படுகின்றது. அன்னாரோ நான் கூறியது போன்று, இஸ்லாமிய போதனைகளின்படி அமல்படுத்துதல் மற்றும் சட்டம் இயற்றுதல் பக்கமும் கவனமூட்டியிருந்தார்கள். இன்றைய நாட்களில் கூறப்படுவது போன்று அஹ்மதிகள் அவ்வளவு இஸ்லாத்திற்கு எதிரிகள் என்றால், பின்னர் இந்த ஆலோசனைக்கும் கவனமூட்டுதலுக்கும் என்ன அவசியம் இருந்தது? எவ்வாறிருப்பினும், இன்றைய நாட்களிலோ பெயர்தாங்கி முல்லாக்கள் நாட்டை பிணைகைதியாக மாற்றுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றான். அல்லாஹ் நாட்டில் நேர்வழி பெற்ற ஒரு மனிதரை தோன்றச் செய்வானாக! அவர் இவர்களின் தவறான திட்டங்களிலிருந்து நாட்டிற்கு இரட்சிப்பு வழங்கட்டுமாக! மேலும் நாட்டை முன்னேற்றத்தின் வழிகளில் வழிநடத்தட்டுமாக!

அடுத்து ஒரு கட்டுரை உள்ளது. "நாம்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

உலகில் நிறுவிய இஸ்லாமிய கட்டடத்தின் ஒரு செங்கல் பாகிஸ்தான் ஆகும்" என்ற ஒரு கட்டுரை இருக்கின்றது. இந்த சொற்பொழிவை அன்னார் (ரலி) டவுன்ஹால், குவைட்டாவில் நிகழ்த்தியிருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பாகிஸ்தான் உருவான உடனேயே "பாகிஸ்தானின் எதிர்காலம்" என்ற தலைப்பில் முன்னர் கூறப்பட்டது போன்று லாஹுரில் ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அதற்கு சில காலம் கழித்து ஹுஸுர் மேற்கு பாகிஸ்தானின் இரண்டாவது தலைமையக நகரங்களுக்கு சென்று விட்டார்கள். மேலும், பாகிஸ்தானின் ஆயிரக்கணக்கான குடிமக்களுக்கு பாகிஸ்தானின் ஸ்திரத்தன்மை என்ற தலைப்பில் தமது அகப்பார்வை மிக்க எண்ணங்களையும், கட்டுமான சிந்தனைகளையும் வெளிப்படுத்தினார்கள். ஜுன் 1948-ல் ஹுஸுர் குவைட்டாவிற்கு சென்று விட்டார்கள். குவைட்டாவில் மிகவும் தகவல்கள் நிறைந்த மற்றும் ஆன்மாவிற்கு புத்துணர்வு வழங்கக் கூடிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதில் பாகிஸ்தான் எதிர்கொள்ள இருக்கும் முக்கியமான தேசிய விவகாரங்களில் பாகிஸ்தான் வாசிகளுக்கு வழிகாட்டியவாறு மிகுந்த விளக்கத்துடனும், மிகவும் விரிவாகவும் தமது சமுதாய மற்றும் மார்க்கப் பொறுப்புகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனமூட்டினார்கள். மேலும் தமது உத்வேகம் நிறைந்த மற்றும் நேசம் நிறைந்த சொற்களால் எல்லையற்ற ஈமானிய ஆற்றல் மற்றும் ஏளனப்படுத்த முடியாத அளவிலான உறுதி மற்றும் பற்றுடன் லட்சக்கணக்கான மரணித்த மற்றும் வேதனைக்குள்ளாகியிருந்த உள்ளங்களில் வாழ்வு மற்றும் நற்செய்திக்கான ஒரு வலிமையான ஆன்மாவை ஊதிவிட்டார்கள்.

இந்த சொற்பொழிவை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஜுலை 4, 1948 அன்று டவுண் ஹாலில் "பாகிஸ்தான் மற்றும் அதன் எதிர்காலம்" என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள். இது மார்ச், 1952- அல்ஃபஸ்ல் இதழில் வெளியாகி இருக்கின்றது.

(நாம் உலகில் நிறுவ வேண்டிய அந்த இஸ்லாமியக் கட்டடத்தின் ஒரு செங்கல் பாகிஸ்தான் ஆகும் என்ற நூல், அன்வாருல் உலூம், பாகம் 19, பக்கம் 19)

பாகிஸ்தானின் முன்னேற்றம் மற்றும் அதன் உறுதிப்பாடு தொடர்பாக பொன்னான அறிவுரைகள். நவம்பர் 11, 1949 அன்று அஹ்மதிய்யா ஜமாஅத் ஸர்கோதா, கம்பெனி தோட்டத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அந்த காலத்தில் ஜல்ஸா நடத்த முடிந்தது. தற்போதோ நாம் நமது தர்பிய்யத் ஜல்ஸாவைக் கூட நடத்த முடியாது. இந்த ஜல்ஸா இந்த அடிப்படையில் ஒரு தனித்துவம் வாய்ந்த சிறப்பைக் கொண்டிருந்தது. அதாவது இதில் முதல் முறையாக ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஸர்கோதா மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களிலிருந்து அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த ஆயிரக்கணக்கான அஹ்மதி மற்றும் அஹ்மதி அல்லாத சகோதரர்களுக்கு தமது விலைமதிக்க முடியாத அறிவுரைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கினார்கள். மேலும் அவர்களுக்கு இஸ்லாமிய கட்டளைகளின்படி அமல் செய்வதன் பக்கமும்,பாகிஸ்தானை வலுவிலும் வலுவாக மாற்றுவதன் பக்கமும் உள்ளத்தை மிகவும் கவரும் வகையில் கவனமூட்டினார்கள். ஹுஸுர் (ரலி) அவர்களின் முதல் சொற்பொழிவு முதல், இறுதி சொற்பொழிவு வரை அனைத்து சொற்பொழிவும் மிகவும் ஆர்வத்தை தூண்டக் கூடியதாகவும், முழுமையாக மூழ்கி விடும் வகையில் அமைந்ததாகவும் இருந்தது. மேலும் அனைவரும் கவனத்துடன் கேட்டனர்.

ஹுஸுர் (ரலி) அவர்கள் பாகிஸ்தானின் பாதுகாப்பு மற்றும் அமைதியை கருத்தில் கொள்ளுமாறு கவனமூட்டியவாறு கூறினார்கள்:

இறைவா! எங்களுக்கு இந்த நாட்டை வழங்குவாயாக! என்று நாமே வேண்டியிருந்தோம். தற்போது அதனை சரியான ரீதியில் நிலைபெறச் செய்வதும், மேலும் அதனை முன்னேற்றுவதும் நமது கைகளில் உள்ளது. நாம் நமது கடமைகளை புரியவில்லை என்றால், பின்னர் இவ்வுலகிலும், மறுவுலகிலும் வெட்கப்படுவோம். நான் உங்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப உங்களுக்கு இந்த நாட்டை வழங்கினேன்; ஆனால் நீங்கள் அதனை வீணாக்கி விட்டீர்கள் என்று அல்லாஹ் நம்மிடம் கூறுவான்.

இன்றைய நாட்களில் முல்லாக்கள் தான் வீணடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். பாகிஸ்தானின் வருமானத்தைப் பெருக்குவதற்காக அன்னார் அனைத்து வாழ்வியல் துறைகளைச் சேர்ந்த மக்களுக்கும், அவர்கள் நேர்மையுடன் தமது வரியை செலுத்துவதற்கும், பாகிஸ்தானின் பாதுகாப்பிற்கு அதிக அதிகமாக இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வதற்கும் அறிவுரை நல்கினார்கள்.

நாமோ இஸ்லாத்திற்காக பாகிஸ்தானை கேட்டோம்; ஆனால், பாகிஸ்தானிய அரசாங்கம் இஸ்லாமிய அரசாங்கத்தை நிறுவுவதற்கு எதையும் செய்வதில்லை என்ற சர்ச்சை அந்த நாட்களில் செய்தித்தாள்களில் எழுந்தது. இது தொடர்பாக அகப்பார்வை மிக்க வழிகாட்டலை ஹுஸுர் (ரலி) அவர்கள் வழங்கினார்கள்: மேலும் இறுதியில் இவ்வாறு கூறினார்கள்:

முழக்கம் இடுவது மட்டும் எந்தவொரு சமுதாயத்திற்கும் வெற்றிக்கு அடையாளமாக இருக்காது. தற்போது அனைத்து மக்களும் நாரே தக்பீர் என்று முழக்கமிட்டு, மேலும் பாகிஸ்தான் வாழ்க ; இந்தியா ஒழிக என்று தற்போது எல்லா மக்களும் கூறினாலும் அதனால் இந்தியாவின் ஒரு எலி கூட மரணிக்காது. முழக்கத்தால் எதுவுமே மரணிக்காது. ஆனால், எல்லா மக்களும் நான் தற்போது குறிப்பிட்ட இந்த விஷயங்களின்படி அமல் செய்ய தொடங்கிவிட்டால் அதாவது வியாபாரி வரி செலுத்த துவங்கிவிட்டால், பொதுமக்கள் பயணச் சீட்டு எடுக்காமல் பயணம் செய்யாமல் இருந்தால், இளைஞர்கள் வீணான விஷயங்களில் தமது நேரத்தை வீணடிப்பதற்கு பகரமாக கல்வியில் முன்னேறினால், மேலும் வலிமை படைத்த இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்தால், மேலும், அதிகாரி கையூட்டுப் பெறும் பழக்கத்தை கைவிட்டு விட்டால், மேலும் அனைத்து பணிகளையும் நேர்மையுடனும், உழைப்புடனும் செய்தால் பின்னர் பாகிஸ்தான் செயல் வடிவில் வலிமையடைந்து கொண்டே சென்று விடும்.

ஆனால் இன்றைய நாட்களிலோ முன்னரை விட அதிகமாக இதற்கு எதிராக நிகழ்கின்றது.

அடுத்து அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

பின்னர் ஒரு முறை கூட நீங்கள் பாகிஸ்தான் வாழ்க என்று கூறாவிட்டாலும் கூட பாகிஸ்தான் வாழ்க என்பதே விளைவாக வெளிப்படும்.

(பாகிஸ்தானின் முன்னேற்றம் மற்றும் அதன் உறுதிப்பாடு தொடர்பான பொன்னான அறிவுரைகள், அன்வாருல் உலூம், தொகுதி 21, பக்கம் 18 -20)

முழக்கமிட்டாலும் சரி; இல்லையென்றாலும் சரி. எவ்வாறிருப்பினும், பாகிஸ்தான் வாழ்க என்பதற்கான செயல் சான்று கிடைத்து விடும்.

இராணுவ கட்டுரைகளும் ஏராளம் இருக்கின்றன. ரஷ்யா மற்றும் தற்போதைய போர் என்பது தொடர்பாக ஒன்றை நான் எடுத்துக்காட்டாக எடுத்திருக்கின்றேன். இரண்டாம் உலகப் போரில் ரஷ்யா போலந்தில் நுழைதல் தொடர்பாக இந்த கருத்து இருக்கின்றது.

இரண்டாம் உலகப் போரின் போது, ரஷ்யா போலந்தில் நுழைந்தபோது, அந்நேரம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்தக் கட்டுரையை எழுதினார்கள். செப்டம்பர் 21, 1939 தேதி அல்ஃபஸ்ல் தினசரி காதியானில் வெளியானது. ஹுஸுர் (ரலி) அவர்கள் இந்தக் கட்டுரையில் ரஷ்யா போலந்தில் நுழைந்ததற்கான காரணங்கள் மற்றும் நோக்கத்தை விமர்சித்தவாறு இவ்வாறு கருத்து கூறினார்கள்:

ரஷ்யா போலந்தை துண்டாட விரும்புகின்றது. அதன் நிய்யத் சரியானதாக தெரியவில்லை. அது ஜெர்மனியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு விட்டது. மேலும், தனது இராணுவத்தை போலந்திற்கு அனுப்புவதில் ஏன் பிடிவாதமாக இருக்கின்றது என்றால், ஜெர்மனி போலந்தை கைப்பற்றுவதற்கு எளிமையை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். மேலும் இரத்தம் சிந்தாமல் அரசாங்கத்தை அகற்ற வேண்டும் என்று அது விரும்புகின்றது. ஒருவேளை இவ்வாறு வெற்றி கிடைக்கவில்லையென்றால், பின்னர் இந்த ஒப்பந்தத்தின் மூலமாக ஜெர்மனி போலந்தின் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும் என்பது எண்ணமாகும்.

மற்ற நாடுகள் இதில் தலையிட்டால் சரி; இல்லையென்றால் பின்னர் ஜெர்மனி போலந்தை நசுக்கி விட வேண்டும். மேலும், இரண்டு நாடுகளும் இதனை பங்கிட்டு கொள்ள வேண்டும் என்பது அதன் எண்ணமாகும்.

மேலும் இந்தக் கட்டுரையில் ஹுஸுர் (ரலி) அவர்கள் இந்த போருக்குப் பிறகு நிலவிய நிலைமைகளின் மீது ஒளிபாய்ச்சினார்கள். மேலும் தமது அகப்பார்வையால் கூட்டணிக்கு பயனுள்ள ஆலோசனைகளை வழங்கினார்கள்.

(ரஷ்யா மற்றும் தற்போதைய போர் எனும் நூல், அன்வாருல் உலூம், தொகுதி 15, பக்கம் 13 - 14)

மேலும் மிகவும் பயனுள்ள ஆலோசனைகளாக அவை இருந்தன. அதனால் தான் போலந்தும் தப்பித்தது.

எவ்வாறிருப்பினும், உலகளாவிய நிலைமைகளின் மீதும் அன்னார் (ரலி) ஆழமான பார்வை கொண்டிருந்தார்கள்.நான் கூறியது போன்று இது தொடர்பாக அன்னாருடைய இன்னும் பல கட்டுரைகளும் இருக்கின்றன. மார்க்க சொற்பொழிவுகள் மற்றும் விளக்கவுரைகள் நான் கூறியது போன்று அசாதாரண

எண்ணிக்கையில் இருக்கின்றன. ஜுமுஆ பேருரைகள், ஜமாஅத்துடைய ஜல்ஸாக்கள் மற்றும் மற்ற சந்தர்ப்பங்களில் ஆற்றிய உரைகள் போன்றவையும் இருக்கின்றன. ஆக இவை அறிவு மற்றும் ஞானத்தின் ஒரு கருவூலம் ஆகும்.

பழைய தஃப்ஸீரே கபீர் பத்து தொகுதிகளில் இருந்தது. தற்போது அன்னாருடைய நோட்ஸ்களும் அதில் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளன. எனவே பதினைந்து தொகுதிகளில் புதிதாக அச்சிடப்பட்டு விட்டது. மேலும், கட்டுரைகள் கூடுதல் விளக்கத்துடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பின்னர் மேலும் சில சூராக்களின் தஃப்ஸீரும் அன்னாருடைய சில நோட்ஸ்களில் இருந்து கிடைத்துள்ளன. அது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. அநேகமாக, இவை வெளியிடப்படும்போது அதுவும் முப்பது தொகுதிகள் ஆகிவிடும். ஏனெனில், 30,000 பக்கங்கள் இருக்கின்றன.

எனவே அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் முன்னறிவிப்பில் என்ன வாக்குறுதி வழங்கியிருந்தானோ அதனை அல்லாஹ் எல்லா அம்சத்திலும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது (ரலி) அவர்களிடம் முழுமையடைவதை வெளிப்படுத்தினான். சில உதாரணங்களை தற்போது நான் உங்களுக்கு வழங்கியுள்ளேன்.

அன்னாருடைய அறிவு மற்றும் ஞானம் நிறைந்த இந்த நூல்களை நாம் படிப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் ஏராளமான விஷயங்கள் எப்படிப்பட்டவையாக இருக்கின்றன என்றால், அவை இன்றைய நிலைமைகளுக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கின்றன. மேலும் அதிலிருந்து நாமும் பயன் பெற வேண்டும். அல்லாஹ் அதற்கான நற்பேறை வழங்குவானாக.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை மார்ச் 14, 2025, பக்கம் 2-7)

தமிழாக்கம்
மவ்லவி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

முதல் பக்கத் தொடர்ச்சி....
(மல்ஃபூஸாத் ..)

நினைவிருக்கின்றது. நான் இளமைப்பருவத்தில் ஒருமுறை கனவில் இவ்வாறு கண்டேன்; அதாவது நோன்பு நோற்பது அஹ்லே பைத்தின் சுன்னத்தாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு ஆதரவாக இவ்வாறு கூறினார்கள்:

سَلۡمَانُ مِنَّا اَهۡلَ الۡبَيۡتِ

ஸல்மான் அதாவது

اَلصُّلۡحَان

என்ற அந்த நபரின் கைகளால் இரு சமாதானம் நிகழும். ஒன்று, உட்புற சமாதானம்; மற்றொன்று வெளிப்புற சமாதானம். இவர் இந்த பணியை மென்மையின் மூலமாக செய்வாரே தவிர வாளினால் அல்ல. போர் புரிந்த ஹுஸைன் அவர்களின் நீர் அருந்தும் இடத்தில் நான் இல்லை ; மாறாக நான் போர் புரியாத ஹஸன் அவர்களின் நீர் அருந்தும் இடத்தில் உள்ளேன்.

ஆக, இது நோன்பின் பக்கம் சுட்டி காட்டுகின்றது என்பதை நான் புரிந்து கொண்டேன். ஆக, நான் ஆறு மாதம் வரை நோன்பு வைத்தேன். இதற்கிடையில் நான் (கனவில்) கண்டேன்: ஒளிகளால் நிறைந்த நிறைய தூண்கள் விண்ணிற்கு சென்று கொண்டிருக்கின்றன. ஒளியின் தூண்கள் பூமியிலிருந்து விண்ணிற்கு சென்றனவா அல்லது எனது இதயத்திலிருந்து சென்றனவா? என்ற விஷயம் ஐயமாக இருக்கின்றது. ஆயினும், இவை அனைத்தும் இளமைப் பருவத்தில் செய்ய முடிந்திருந்தது. நான் விரும்பியிருந்தால் பின்னர் நான்கு வருடம் வரை கூட நான் நோன்பு வைத்திருக்க முடியும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 424, 2018-ம் ஆண்டு காதியான் பதிப்பு)

* * * * * * * *

1-ம்பக்கத் தொடர்ச்சி....
(தஃப்ஸீரே கபீர்...)

(ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த நபர் புறம் பேசுதல், குறைகூறுதல், தீயப் பேச்சு போன்ற தீய விஷயங்களிலிருந்து விலகி இருப்பதில்லையோ அவரது நோன்பு நோன்பாக இருக்காது. ஆக, தம்மிடம் இருந்து நன்மை மட்டுமே வெளிப்பட வேண்டும் ;மேலும் புறம் பேசுதல் மற்றும் சண்டை சச்சரவுகளிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று நம்பிக்கையாளரும் முயற்சி செய்கின்றார். இதே போன்று அவர் எந்த அளவிற்கு இயலுமோ அந்த அளவிற்கு வல்ல இறைவனுடன் ஒப்புமையை உருவாக்கிக் கொள்கின்றார்.

எனவே நோன்பின் ஓர் ஆன்மிகப் பயன் இதுவாகும். அதாவது மனிதன் இறைவனுடன் உயர்தரமான தொடர்பை ஏற்படுத்தி கொண்டுவிடுகின்றான். மேலும் இறைவன் சுயமே அவனது பாதுகாவலனாகி விடுகின்றான்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 2, பக்கம் 378, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * * *

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

12-ம் பக்கம் தொடர்ச்சி...
(குத்பா பேருரை 28.2.2025)

ஜனாஸாவில் அவர்களால் கலந்து கொள்ள முடியவில்லை. மர்ஹூமுடைய மற்ற அனைத்து பிள்ளைகளும் ஏதாவது ஒரு வகையில் ஜமாஅத்துக்கு தொண்டாற்றக் கூடிய நல்வாய்ப்பை பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

நாஸிர் மஹ்மூத் ஸாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: குடும்பத்தில் அன்னாருடைய பாட்டனார் ஹஸ்ரத் சவுத்ரி குலாம் முஹம்மது பட் (ரலி) அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அவர்கள் காதியான் சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கரத்தில் பைஅத் செய்தார்கள். அவர்கள் தனது கிராமத்தின் முதல் அஹ்மதிகளுள் ஒருவராக இருந்தார்கள். 1996-இல் மர்ஹூம் அவர்கள் ஒரு வழக்கில் ஏறக்குறைய ஒரு மாதம் வரை இறைவழிக் கைதியாக இருக்கக் கூடிய நல்வாய்ப்பையும் பெற்றார்கள். அந்த காலகட்டத்தில் அவர்கள் மீது போலீஸ் மிக மோசமாகவும், கடுமையாகவும் நடந்து கொண்டது. ஆனால், அவர்கள் அல்லாஹ்வுடைய திருப்திக்காக அந்த அனைத்தையும் பொறுத்துக் கொண்டார்கள். மிக துணிவுடன் அந்த தண்டனையை கழித்தார்கள்.

ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத் அமைப்புக்கு அதிக கண்ணியம் அளிக்கக் கூடியவராக இருந்தார்கள். தொழுகைகள் மற்றும் சந்தாக்கள் போன்றவற்றை முறையாக பேணக் கூடியவராக இருந்தார்கள். வாழ்நாளிலேயே சொத்துக்களுக்கான சந்தாவையும் செலுத்தி விட்டார்கள். ஏதேனும் வருமானம் வரும்போது அனைத்தையும் விட முதலில் சந்தாவுக்காக கொடுத்து விடுவார்கள்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அவர்களின் பிள்ளைகளுக்கும் பொறுமையையும் மனதிடத்தையும் வழங்குவானாக! நாட்டுக்கு வெளியே இருக்கின்ற அவருடைய மகனுக்கும் பொறுமையையும் மனதிடத்தையும் வழங்குவானாக!

தமிழாக்கம்

மவ்லவி
A.P..A தாரிக் அஹ்மது

* * * * * * * *

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953
toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339
alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327
gemscertify22@gmail.com

# ஜுமுஆ பேருரை

**ஃஹைபர் போரின் பின்னணியில் ஸீரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு & ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு விஷம் கொடுப்பதற்கான இழிவான சதித்திட்டமும் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களை திருமணம் புரிந்ததின் விளக்கங்களும்**

அந்த (யூத) அநியாயக்காரர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த அளவு அவர்களுடன் மன்னித்தலுடனும், மென்மையுடனும் நடந்து கொண்டார்கள் என்பதை காழ்ப்புணர்ச்சிக் கொண்ட வரலாற்றாசிரியர்கள் பாராட்டாமல் இருப்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; அதை அவர்கள் குறிப்பிடுவது கூட கிடையாது

அவர்கள் சமாதானத்திற்காக யூதர்கள் கோரிக்கை வைத்தபோது, அதை ஏற்றுக் கொண்டவாறு அவர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையையும் அன்னார் (ஸல்) ஒப்புக் கொண்டவாறு அவர்களை மன்னித்தார்கள். பிறகு அது மட்டும் இன்றி, அங்கேயே இருப்பதற்கு எங்களுக்கு அனுமதி அளித்தால் நாங்கள் விவசாயத்தை தொடர்வோம்; பாதி விளைச்சலை தாங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று அந்த யூதர்கள் கோரிக்கை வைத்தபோது, அவர்களுடைய இந்த கோரிக்கையையும் அன்னார் (ஸல்) ஏற்றுக் கொண்டார்கள். சாந்தி மற்றும் சமாதானத்திற்கான ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது

ஏதேனும் ஹதீஸிலோ, வரலாற்று நூல்களிலோ அல்லது வாழ்க்கை வரலாறு நூல்களிலோ பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக ஏதேனும் அறிவிப்பு வந்துள்ளது என்றால், நான் மேலே ஓதி காட்டிய திருக்குர்ஆன் வசனத்தின் அடிப்படையில் அதை பார்க்க வேண்டும். அல்லாஹ்வுக்காகவே அன்னாருடைய அனைத்தும் இருந்தன. அந்த வசனத்தின் ஒளியிலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியிலும் இந்த விஷயங்களை நாம் பார்க்க வேண்டும்; கண்டறிய வேண்டும்

அதுவல்லாமல், ஒவ்வொரு மேற்கத்திய எழுத்தாளர்களின் விஷயத்தையும் ஒப்புக் கொண்டு (வீணாக) பழி சுமத்தக் கூடாது. நாம் பதில் பேச முடியாமல் ஆகிவிட்டோம் என்று நினைத்து விடக் கூடாது. இதுதான் பெருமானார் (ஸல்) அவர்களின் பரிசுத்தத் தன்மையை நிலைநாட்டக் கூடிய அசல் பணியாகும். வெறுமனே முழக்கமிடுவது போதுமானதன்று

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 பிப்ரவரி 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **தப்லீஃக்** மாதம் **28 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக கூறப்பட்ட போது போரில் அன்னாருடைய முன்மாதிரி எவ்வாறு இருந்தது? என்று கூறப்பட்டது. ஃஹைபர் போர் பற்றிய குறிப்பு சென்று கொண்டிருந்தது. ஃஹைபர் போருக்கு பிறகு யூதர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு ஒரு சதித்திட்டம் தீட்டினர். விஷம் கலந்த ஆட்டிறைச்சி கொடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் விபரம் எப்படியென்றால், ஃஹைபர் வெற்றி கொள்ளப்பட்டபோது, ஃஹைபர் வாசிகளுடன் உடன்படிக்கை செய்யப்பட்டது. யூதர்கள் மோசமாக தோல்வியடைந்ததற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் கருணை மற்றும் பரிவிலிருந்து மீண்டும் ஒருமுறை அவர்கள் பயனடைந்தார்கள். அது என்னவென்றால், அன்னார் (ஸல்), அவர்களை மன்னித்தது மட்டுமின்றி ஃஹைபரில் வசிப்பதற்கும் அனுமதி அளித்தார்கள். ஆகவே மக்கள் நிம்மதி அடைந்தபோது, ஒருநாள் ஃஹைபருடைய யூத படைத்தளபதியான ஸலாம் பின் மிஷ்கம் என்பவனின் மனைவி ஸைனப் பின்த் ஹாரிஸ் என்பவள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் பொறித்த ஆட்டிறைச்சியை கொண்டு வந்து கொடுத்தாள். தங்களுக்காக அன்பளிப்பு கொண்டு வந்துள்ளேன் என்றாள். இந்த சதித் திட்டத்தில் இந்தப் பெண் தனியாக ஈடுபடவில்லை ; மாறாக இன்னும் சில யூதர்களும் இருந்தனர் என்றும் சில இடங்களில் கூறப்பட்டுள்ளது. அன்னாருடைய கட்டளைக்கிணங்க அந்த அன்பளிப்பு அன்னாருக்கு முன்னால் வைக்கபட்டது. அங்கு சில ஸஹாபிகளும் இருந்தனர். அவர்களுள் ஹஸ்ரத் பிஷ்ர் பின் பராஃ (ரலி) அவர்களும் இருந்தார்கள். பெருமானார் (ஸல்) ஸஹாபிகளிடம், நெருங்கி வாருங்கள் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு அன்னார் (ஸல்) அந்த இறைச்சியில் இருந்து முன்னஞ்சந்து பகுதியை எடுத்தார்கள். அதிலிருந்து ஒரு சிறிய துண்டை எடுத்தார்கள். மற்ற மக்களும் இறைச்சியை எடுத்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடம், உங்கள் கைகளை தடுத்துக் கொள்ளுங்கள்; ஏனெனில், இந்த முன்னஞ்சந்து இறைச்சி விஷம் தேய்க்கப்பட்டிருப்பதாக கூறுகிறது என்றார்கள். ஹஸ்ரத் பிஷ்ர் பின் பராஃ (ரலி) அவர்களும் இருந்தார்கள். தங்களுக்கு கண்ணியமும், மேன்மையும் வழங்கிய இறைவன் மீது ஆணையாக! நான் உண்ட இறைச்சித் துண்டில் எதையோ நான் உணர்ந்தேன். தங்களுடைய உணவு வீணாகி விடக் கூடாதே! என்பதற்காக நான் அதை துப்பவில்லை. தாங்கள் விழுங்கியதை கண்டபோது எனக்கு என்னை விட தங்களைப் பற்றிய அதிக அக்கறை ஏற்பட்டது. தாங்கள் அதை விழுங்காததை எண்ணி எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்று கூறினார்கள். ஹஸ்ரத் பிஷ்ர் (ரலி) அவர்கள் தம் இடத்தை விட்டு எழக் கூட இல்லை. அவர்களின் உடல் நிறம் மாறத் துவங்கியது. பிறகு எந்த அளவு நோய்வாய்ப்பட்டார்கள் என்றால் அவர்களால் திரும்பி படுக்கக் கூட இயலாமல் இருந்தது. ஏறக்குறைய ஒரு வருடத்திற்குப் பிறகு அவர்கள் மரணமடைந்தார்கள்.

ஹஸ்ரத் பிஷ்ர் (ரலி) அவர்கள் தம் இடத்தை விட்டு எழுந்திருக்க முடியாமல் இருந்தபோதே அங்கேயே அவர்கள் மரணமடைந்தார்கள் என்றும் சிலர் கூறுகிறார்கள். இருவகையான அறிவிப்புகள் உள்ளன. பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பெண்ணை வரவழைத்தார்கள். இந்த ஆட்டிறைச்சியில் விஷத்தை கலந்தாயா? என்று கேட்டார்கள். தங்களுக்கு யார் தகவல் கொடுத்தது? என்று அவள் கேட்டாள். என் கையில் இருக்கக் கூடிய இந்த முன்னஞ்சத்து இறைச்சி தகவல் கொடுத்தது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அதற்கு அந்தப் பெண், ஆம்! நான் தான் விஷத்தை கலந்தேன் என்றாள். உன்னிடம் இந்த வேலையை யார் செய்யச் சொன்னது? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, தாங்கள் என்னுடைய சமுதாயத்துடன் நடந்து கொண்டது தங்களிடத்தில் மறைவாக இல்லை, தாங்கள் அரசராக இருந்தால் நாங்கள் தங்களிடமிருந்து இரட்சிப்பை பெற்று விடுவோம். தாங்கள் நபியாக இருந்தால் தங்களுக்கு தகவல் கிடைத்து விடும் என்று நான் கருதினேன் என்று அவள் கூறினாள். அன்னார் (ஸல்) அந்தப் பெண்ணை மன்னித்து விட்டார்கள். அந்தப் பெண்ணை பழி வாங்கவில்லை.

இன்னோர் அறிவிப்பில், இவ்வாறு செய்யுமாறு உன்னை யார் தூண்டி விட்டார்கள் என்று அன்னார் (ஸல்) அந்தப் பெண்ணிடம் கேட்டபோது, தாங்கள் எனது தந்தை, தந்தையின் சகோதரர், கணவர் மற்றும் சகோதரனை கொன்று விட்டீர்கள் என்று அவள் கூறியதாக வருகிறது.

மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் பிஷ்ர் பின் பராஃ (ரலி) அவர்கள் மரணமடைந்தபோது, அந்தப் பெண்ணை கொல்லுமாறு அன்னார் (ஸல்) கட்டளையிட்டார்கள் என்றும் ஆகவே அவள் கொல்லப்பட்டாள் என்றும் வருகிறது.

இவ்வாறும் ஓர் அறிவிப்பு உள்ளது:

அந்தப் பெண் கொலை செய்யப்படவில்லை என்று ஸஹீஹ் முஸ்லிமில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: யூத பெண்ணொருத்தி பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் விஷம் கலந்த ஆட்டிறைச்சி கொண்டு வந்தாள். அதிலிருந்து அன்னார் (ஸல்) கொஞ்சம் உண்டார்கள். பிறகு அந்தப் பெண் அன்னாரிடம் கொண்டு வரப்பட்டாள். அதைக் குறித்து அன்னார் (ஸல்) அந்தப் பெண்ணிடம் கேட்டபோது, நான் தங்களை கொலை செய்ய விரும்பினேன் என்று அவள் கூறினாள். அல்லாஹ் உனக்கு அதற்கான ஆற்றலை வழங்கவே மாட்டான் என்றோ அல்லது எனக்கு எதிராக அல்லாஹ் உனக்கு அதற்கான ஆற்றலை வழங்க மாட்டான் என்றோ அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: இவ்வாறு நடந்து கொண்ட அந்தப் பெண்ணை நாங்கள் கொலை செய்து விடவா? என்று மக்கள் கேட்டபோது வேண்டாம் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அந்த விஷத்தின் தாக்கத்தை அன்னாருடைய தொண்டையில் நான் கண்டு வந்தேன் என்று அறிவிப்பாளர் கூறுகிறார்.

அல்லாமா நவவி அவர்கள் ஸஹீஹ் முஸ்லிமுடைய விளக்கவுரையில் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களுடைய அறிவிப்பை எழுதியிருக்கின்றார்கள். அதில் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை கொலை செய்ய வைத்தார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்னு அப்பாஸ் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை ஹஸ்ரத் பிஷ்ர் (ரலி) அவர்களின் சந்ததிகளிடத்தில் ஒப்படைத்து விட்டார்கள். அவர்கள் அப்பெண்ணை கொன்று விட்டார்கள். அன்னார் (ஸல்) அந்தப் பெண்ணை கொலை செய்யுமாறு கூறினார்கள் என்ற விஷயத்தில் ஹதீஸ் வல்லுனர்களிடத்தில் ஒருமித்த கருத்து காணப்படுகிறது. காஸீ அயாஸ் அவர்களின் கூற்றுக்கிணங்க கொலை செய்தது அல்லது கொலை செய்யாதது ஆகிய (இரு வகையான) அறிவிப்புகளை எவ்வாறு ஒப்பிட்டு பார்க்க முடியும் என்றால், முதலில் அன்னார் (ஸல்) அந்தப் பெண்ணை கொலை செய்யவில்லை. ஆனால், ஹஸ்ரத் பிஷ்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்தபோது அன்னார் (ஸல்) அந்தப் பெண்ணை ஹஸ்ரத் பிஷ்ர் (ரலி) அவர்களின் வாரிசுகளிடத்தில் ஒப்படைத்தார்கள். அவர்கள் பழிவாங்கும் விதமாக அவளை கொன்று விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை மன்னித்து விட்டார்கள் என்பதற்கே அதிக சாத்தியம் உள்ளது. ஏனெனில், முஸ்லிமுடைய ஹதீஸிலிருந்து (அது) தெளிவாக நிரூபணம் ஆகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

யூதப் பெண் ஒருவள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிராணிகளின் எந்தப் பாகத்திலுள்ள இறைச்சியை அதிகமாக விரும்புவார்கள் என்று நபித்தோழர்களிடம் கேட்டாள். முன்னஞ்சந்து இறைச்சியை அன்னார் (ஸல்) அதிகம் விரும்புவார்கள் என்று நபித்தோழர்கள் கூறினர். இதைக் கேட்டு, அவள் ஓர் ஆட்டை அறுத்து, இறைச்சித் துண்டுகளைச் சூடான கற்களில் வாட்டி அவற்றிலும் குறிப்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிகமாக விரும்பி உண்ணக் கூடிய முன்னஞ்சந்து இறைச்சியிலும் விஷத்தைக் கலந்து விட்டாள்.

பொழுதடைந்த பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மாலைத் தொழுகையை நிறைவேற்றி விட்டுத் தங்களுடைய கூடாரத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, தங்களுடைய கூடாரத்திற்குப் பக்கத்தில் ஒரு பெண் அமர்ந்திருப்பதைக் கண்டு, பெண்ணே! எதற்காக இங்கு வந்திருக்கின்றாய்? என்று வினவியதற்கு, அவள் அன்னாரிடம், அபுல் காஸிம் அவர்களே! நான் தங்களுக்காக ஓர் அன்பளிப்பு கொண்டு வந்துள்ளேன் என்று கூறினாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நபித்தோழரிடம், இவள் தரும் பொருளை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். இதன் பின்னர் அன்னார் உணவு உண்ண அமர்ந்தபோது அந்த உணவுடன் அந்த பெண் அளித்த பொறித்த முன்னஞ்சந்து இறைச்சியும் வைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து அன்னார் (ஸல்) ஒரு துண்டு சாப்பிட்டார்கள். நபித்தோழர்களுள் பஷீர் பின் பராஃ பின் மஃரூர் (ரலி) என்பவரும் ஒரு துண்டு சாப்பிட்டு விட்டார்கள்.

ஸஹாபியின் பெயர் இங்கு பஷீர் என்பதற்குப் பதிலாக பிஷ்ர் என்று வந்திருக்க வேண்டும்.

ஏனைய நபித்தோழர்களும் அந்த இறைச்சியைக் சாப்பிட கையை கொண்டு சென்ற போது, அதனை உண்ணாதீர்கள்; ஏனெனில், இறைச்சியில் விஷம் கலக்கப்பட்டுள்ளது என்று இந்தக் கை எனக்கு அறிவித்து விட்டது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இது குறித்து இறையறிவிப்பு இறங்கியது என்பது அதன் பொருள் அல்ல. மாறாக, இது அரபு மக்களின் மொழி வழக்காகும். இந்த இறைச்சியைக் சுவைத்துப் பார்த்ததும், இதில் விஷம் கலந்திருப்பது எனக்குத் தெரிந்து விட்டது என்பது இதன் பொருள் ஆகும். திருக்குர்ஆனிலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை விளக்கும்போது, ஒரு சுவரைக் குறித்து அது சரிந்து கீழே விழ விரும்புகிறது என வந்துள்ளது. அதன் பொருள், சரிந்து கீழே விழுவதற்கான அறிகுறிகள் அந்த சுவற்றில் ஏற்பட்டு விட்டன என்பதேயாகும். எனவே இங்கும் அந்தக் கை கூறியது என்று பொருள் கொள்ளக் கூடாது. மாறாக, அந்த இறைச்சியை சுவைத்துப் பார்த்ததினால் எனக்குத் தெரிந்தது என்பதே அதன் கருத்து. இந்தக் கருத்தை இதனை அடுத்து வருகின்ற வாக்கியம் உறுதிப்படுத்துகின்றது.

அப்போது பிஷ்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், தங்களுக்கு மதிப்பளித்த இறைவன் மீது ஆணையாகக் கூறுகிறேன். அந்த இறைச்சித் துண்டில் ஏதோ கலந்திருந்தது எனக்கு தெரிந்தது. அதனைத் தூக்கி எறிந்து விடவேண்டுமென்று என் உள்ளம் விரும்பியது. ஆனால் நான் அவ்வாறு செய்தால் தங்களுக்கு வருத்தம் ஏற்பட்டு தாங்கள் உண்பதை நிறுத்தி விடுவீர்களே என்று எண்ணினேன். இதில் ஒருவேளை விஷம் கலந்திருக்கலாம் என்று எனக்கு ஐயம் தோன்றியது. இதனை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) உண்ணாமல் இருக்க வேண்டுமே! என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, தாங்கள் அதனை உண்டு விட்டீர்கள்; நானும் தங்களைப் பின்பற்றி அதனை உண்டேன் என்று கூறினார்கள். இதனை அடுத்து, சிறிது நேரத்திற்குப் பிறகு பிஷ்ர் (ரலி) அவர்களின் உடல்நலம் கெட்டு விட்டது. சில அறிவிப்புகளில், அவர்கள் அங்கேயே ஃஹைபரிலேயே மரணமடைந்து விட்டார்கள் என்றும் மற்றுஞ் சில அறிவிப்புகளில் அவர்கள் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து பின்னர் மரணமடைந்தார்கள் என்றும் வருகிறது. ஆகவே, அன்னார் (ஸல்) கொஞ்சம் இறைச்சியை ஒரு நாய்க்கு முன்னால் போட்டார்கள். அதை உண்டதால் அது இறந்து விட்டது.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை அழைத்து வரச்செய்து, நீ இந்த இறைச்சியில் விஷத்தைக் கலந்திருக்கிறாய் என்று கூறினார்கள். இதனை தங்களுக்கு அறிவித்தது யார்? என்று அவள் கேட்டாள். இறைச்சித் துண்டைத் தமது கையில் வைத்திருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தக் கை அறிவித்தது என்று கூறினார்கள். இந்த இரகசியம் அன்னாருக்குத் தெரிந்து விட்டதைப் புரிந்து கொண்ட அவள், தானே விஷத்தைக் கலந்ததாக ஒப்புக் கொண்டாள். அப்போது அன்னார் (ஸல்) அவளிடம், வெறுக்கத்தக்க இந்தச் செயலைச் செய்யுமாறு உன்னைத் தூண்டியது எது ? என்று கேட்டதற்கு, என் சமுதாயத்துடன் தாங்கள் போர் புரிந்தீர்கள்; என் உறவினர்கள் இந்தப் போரில் கொல்லப்பட்டனர். எனவே நான் தங்களை விஷம் வைத்து கொலை செய்ய எண்ணினேன். உங்களுடைய விவகாரம் மனிதனுடையதாக இருந்தால் தங்களிடமிருந்து எங்களுக்கு இரட்சிப்பு கிடைத்து விடும். தாங்கள் உண்மையிலேயே இறை தூதராக இருந்தால், இறைவனே தங்களைக் காப்பாற்றி விடுவான் என்று நான் எண்ணினேன் என்று பதிலளித்தாள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்விஷயத்தைக் கேட்டு அவளை மன்னித்து விட்டார்கள். நிச்சயமாக மரண

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com


GRIZZLY
BE ALWAYS AHEAD
Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

தண்டனைக்குரிய குற்றத்தை செய்த அவளுக்கு அதற்கான தண்டனையை கொடுக்கவில்லை.

இது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கருத்து ஆகும்.

இந்த விஷத்தின் காரணமாகவே பெருமானார் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தது என்றும் கூறப்படுகிறது. இது சரியா? ஸஹீஹ் புகாரியில் வருகிறது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த நோயில் இறந்தார்களோ அந்த நோயின்போது, ஆயிஷாவே! ஃகைபரில் (யூதப் பெண்ணொருத்தியால் விஷம் கலந்து கொடுக்கப்பட்ட) அந்த உணவை நான் உண்டதால் ஏற்பட்ட வேதனையை நான் தொடர்ந்து அனுபவித்து வருகிறேன். அந்த விஷத்தின் காரணமாகவே என் இரத்தக்குழாய் அறுந்து போவதை நான் உணர்கிறேன் என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் மரணம் ஃகைபர் போரின்போது, உண்ணப்பட்ட விஷம் கலந்த இறைச்சியால்தான் ஏற்பட்டது என்று சில முஸ்லிம் விரிவுரையாளர்களும் ஹதீஸ் வல்லுனர்களும் இந்த ஹதீஸிலிருந்து தீர்மானத்திற்கு வந்திருக்கின்றார்கள். ஆகவே அன்னாருடைய மரணத்தை ஷஹாதத் என்று விளக்கம் கொடுக்கிறார்கள். அன்னார் (ஸல்) மாபெரும் ஷஹீதாக இருந்தார்கள் என்று கூறுகிறார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களுக்காக இந்த முனைப்பு அவசியமில்லை. நபியுடைய அந்தஸ்தும் தகுதியும் எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்றால், அவர் ஷஹீதாகவும் இருக்கின்றார்; ஸித்தீக் ஆகவும் இருக்கின்றார்; இன்னும் கூறப்போனால், மிக கவனத்துடன் பார்த்தோம் என்றால், இவ்வாறு கூறுவது எள்ளி நகையாட எதிரிக்கு வாய்ப்பு கொடுப்பதற்கு சமமாகும். அன்னார் (ஸல்) இறைவனுடைய உண்மையான நபியாக இருந்தார்கள் என்றால் இந்த விஷத்திலிருந்து தப்பித்து விடுவார்கள் என்றுதான் யூதர்கள் விஷம் கொடுத்தனர். அன்னார் (ஸல்) தப்பித்தன் காரணமாகவே நிச்சயமாக அன்னார் (ஸல்) இறைவனுடைய உண்மையான நபி என்று அவர்கள் புரிந்து கொண்டனர். அவர்களின் பார்வையில் இது ஓர் அற்புதமாக இருந்தது. ஆனால், சில அப்பாவிகள் இந்த விஷத்தினால் அன்னாருடைய மரணம் நிகழ்ந்தது என்று ஒப்புக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கின்றார்கள்.

நிகழ்ந்த சம்பவம் என்னவென்றால், அந்த விஷத்தின் காரணமாக அன்னாருடைய மரணம் ஒருபோதும் - ஒருபோதும் நிகழவில்லை. அன்னார் (ஸல்) மரணத் தருவாயில் கூறியது துன்பத்தின் வெளிப்படையாக இருந்தது. சில நேரங்களில் ஏதேனும் உடல் ரீதியான துன்பமோ, காயமோ அல்லது நோயோ எப்பொழுதாவது ஏதேனும் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் அல்லது குறிப்பிட்ட காலநிலையில் ஏதேனும் காரணத்தினால் வெளியே வந்து விடுகிறது என்பதை ஒவ்வொருவரும் அறிவார். இதனுடைய விளக்கத்தில் சென்று பார்ப்போம் என்றால், விஷம் கலக்கப்பட்ட அந்த இறைச்சியை பெருமானார் (ஸல்) அவர்கள் வாயில் வைத்து விட்டார்கள்தான். ஆனால், விழுங்கவில்லை. வாயில் வைத்ததன் காரணமாக அன்னாருடைய தொண்டையிலோ அல்லது உள் நாக்கு சதையிலோ கொப்பளம் ஏற்பட்டு விட்டது. எப்பொழுதாவது சாப்பிடும்போது அதில் வலி ஏற்படும். அந்த துன்பத்தைதான் பெருமானார் (ஸல்) அவர்கள் இறுதி நோயின்போது வெளிப்படுத்தினார்கள் என்பதையும் அறிய முடிகிறது.

ஃகைபர் போர் தொடர்பாக பார்க்கும்போது, ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களுடன் திருமணம் நிகழ்ந்த குறிப்பும் காணக் கிடைக்கின்றது. அதனுடைய விபரம் இவ்வாறு வருகிறது: ஃகைபருடைய நஸார் என்ற கோட்டை வெற்றிக் கொள்ளப்பட்டபோது, அங்கு பலபேர் சிறைபிடிக்கப்பட்டார்கள். அந்த கைதிகளுள் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களும் அவர்களுடைய தந்தையின் சகோதரருடைய பிள்ளைகளும், மற்ற பெண்களும் இருந்தனர். சில நூல்களில் நஸார் கோட்டைக்கு பதிலாக கமூஸ் கோட்டையினுடைய பெயர் இடம் பெற்றுள்ளது. ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: வந்தடைவதற்கு முன்பே, நஸாருடைய கோட்டைகளில் (மக்களை) சிறைபிடித்து விட்டனர். கினானா உடைய கருத்தின்படி நஸார் கோட்டை மிக உறுதி வாய்ந்தாக இருந்தது. ஆகவே அவர்கள் பெண்களையும், குழந்தைகளையும் நஸாருக்கு மாற்றிவிட்டார்கள். ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் பங்கில் வந்தது, அன்னாருடன் திருமணம் நடப்பது ஆகிய விபரங்கள் இவ்வாறு வருகின்றன ; ஃகைபரில் கைதிகள் ஒன்று கூட்டப்பட்டபோது, திஹ்யா அவர்கள் வந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த கைதிகளில் எனக்கு ஒரு பெண்ணை தாருங்கள் என்று கேட்டார்கள். ஒரு பெண்ணை எடுத்துக் கொள்ளுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஆகவே அவர்கள் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களை எடுத்துக் கொண்டார்கள். அப்போது ஒருவர் அன்னாரிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் அவருக்கு ஹுய்ய் பின் அக்தபுடைய மகளை கொடுத்து விட்டீர்கள். அப்பெண் பனூ குறைழா மற்றும் பனூ நஸீருடைய இளவரசி ஆவாள்; தங்களைத் தவிர வேறு யாருக்கும் அவள் பொருத்தமானவள் கிடையாது என்று கூறினார். அவரை அந்தப் பெண்ணுடன் அழைத்து வாருங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அவர் அவர்களை அழைத்து வந்தார். அன்னார் (ஸல்) திஹ்யா அவர்களிடம் இந்த கைதிகளுள் இவரைத் தவிர வேறு யாரையாவது நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களை விடுதலை செய்து விட்டார்கள்.

முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் உடைய அறிவிப்பில் வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களிடம் நான் உன்னை விடுதலை செய்கிறேன். நீ விரும்பினால் என்னை திருமணம் செய்து கொள்ளலாம்; இல்லை என்றால் உமது கோத்திரத்தை நோக்கி திரும்பிச் செல்லலாம். உள்ளம் விரும்பியபடி நடந்து கொள்ளலாம் என்று கூறினார்கள். ஆகவே ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் விடுதலை பெறுவதையும் அன்னாருடன் திருமணம் புரிவதையும் விரும்பினார்கள்.

இன்னோர் அறிவிப்பில், பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி அவர்களுக்கு அழைப்புக் கொடுத்தார்கள் என்றும், அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள் என்றும் வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் திஹ்யா அவர்களிடம் வேறு ஏதேனும் அடிமைப் பெண்ணை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறியபோது, அவருக்கு ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் தந்தையின் சகோதரருடைய மகளையோ அல்லது கினானா பின் ரபீஃ உடைய சகோதரியையோ வழங்கியதாகவும் ஓர் அறிவிப்பில் வருகிறது. இன்னும் சில அறிவிப்புகளில் அன்னார் (ஸல்) அவருக்கு 7 அடிமை ஆண்களையோ அல்லது ஏழு அடிமைப் பெண்களையோ வழங்கியதாக வருகிறது. மேலும் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களை ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர்களிடத்தில் அனுப்பி வைத்தார்கள். ஃகைபருடைய அனைத்து விவகாரங்களும் முடிந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஃகைபரிலிருந்து புறப்பட்டார்கள். ஆறு மைல் தாண்டிய பிறகு ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களுடனான திருமணத்தை முழுமைப்படுத்தும் வகையில் அன்னார் (ஸல்) அங்கு முகாமிட விரும்பினார்கள். ஆனால், ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அன்னார் (ஸல்) பயணத்தை தொடர்ந்தார்கள். ஃகைபரில் இருந்து ஏறக்குறைய 12 மைல் தொலைவில் ஸஹ்பா எனுமிடத்தில் முகாமிட்டார்கள். ஹஸ்ரத் உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் மணப்பெண்ணை ஆயத்தம் செய்தார்கள். அப்போது அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களிடம், முந்தைய இடத்தில் முகாமிட வேண்டாம் என்று ஏன் தடுத்தீர்? என்று கேட்டபோது, ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் கூறிய பதிலை பார்க்கும்போது, பெருமானார் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கங்கள் எந்த அளவு ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் உள்ளத்தை தூய்மைப்படுத்தி இருந்தன என்பதை அறிய முடிகிறது. ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் யூத தலைவனுடைய மகளாகவும், ஓர் யூதத் தலைவனின் மனைவியாகவும் இருந்தார்கள். அவர்களின் தந்தை அகழ்ப் போருக்கு பிறகு முஸ்லிம்களின் கைகளால் கொல்லப்பட்டிருந்தார். கணவரும் சில நாட்களுக்குப் முன்புதான் கொல்லப்பட்டிருந்தார். திருமணம் ஆகி இரண்டு மாதங்கள்தான் ஆகியிருந்தன. தந்தையினுடைய சகோதரரும் கொல்லப்பட்டிருந்தார். இன்னும் சில நெருங்கிய உறவினர்களும் கொல்லப்பட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களே கூறுகின்றார்கள்: என்னுடைய உள்ளத்தில் அன்னாரைக் குறித்து கடுமையான வெறுப்பு இருந்தது.ஆனால் நான் அன்னாரை முதல் முறையாக சந்தித்தபோது, அன்னார் (ஸல்) மிக நேசத்துடனும், பரிவுடனும் என்னை சந்தித்தார்கள். ஸஃபிய்யாவே! உம் தந்தை முழு அரேபியாவையும் எங்களுக்கு எதிராக ஆயத்தப்படுத்தி அழைத்து வந்தார். அவர் இவ்வாறெல்லாம் நடந்து கொண்டார். இறுதியில் நாங்கள் எங்களை தற்காத்துக் கொள்வதற்காக அவருடைய சதித் திட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஃகைபர் வர வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது என்று மீண்டும் மீண்டும் என்னிடம் வருத்தம் தெரிவித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த அளவு நேசத்துடனும் எந்த

அளவு மீண்டும் மீண்டும் இவ்விஷயத்தை கூறினார்கள் என்றால் அன்னாரைக் குறித்து எனது உள்ளம் முற்றிலும் தூய்மையாகி விட்டது. எனது முதல் சந்திப்பிலேயே அன்னாரை விட அதிக நேசத்திற்குரியவராக எனக்கு யாரும் இருக்கவில்லை.

ஃகைபரில் இருந்து திரும்பிச் செல்லும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொண்ட நிலை எவ்வாறானதாக இருந்தது என்றால், பயணத்திற்காக புறப்பட்டபோது ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் அமர்வதற்காக அன்னார் (ஸல்) தம்முடைய போர்வையை விரித்தார்கள். ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் ஒட்டகத்தில் ஏறும் வகையில் தம் காலை அன்னார் (ஸல்) மடக்கி வைத்தார்கள்.

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் அதன் மீது ஏறி ஒட்டகத்தில் அமர்ந்தார்க்ள். பயணத்தின் போது ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் கண்ணயர்ந்து விடும்போது ஒட்டக இருக்கையில் அவர்களின் தலை இடிக்கும்போது அவர்களுக்கு காயம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக அன்னார் (ஸல்) தம் அருளுக்குரிய கைகளால் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் தலையை பிடித்துக் கொள்வார்கள். ஏனெனில், ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் பரிசுத்த துணைவியாக ஆகியிருந்தார்கள். எனவேதான் ஃகைபரில் இருந்து திரும்பிச் செல்லும்போது, ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் அடிமைப் பெண் கிடையாது; மாறாக அன்னாருடைய மனைவி என்று தெளிவுபடுத்தும் வகையில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களை தமக்குப் பின்னால் ஒட்டகத்தில் அமரச் செய்து பர்தாவுக்காக அவர்கள் மீது போர்வையை போர்த்தியிருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும், 6 மைல் தொலைவில் நிற்பதற்கான காரணத்தை ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களிடம் கேட்டபோது, அவர்கள் அளித்த பதிலுடைய விளக்கத்தைப் பார்க்கும்போது, பெருமானார் (ஸல்) அவர்களின் மேலான நல்லொழுக்கங்களின் தாக்கத்தில்தான் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களுக்கு இவ்வுலகில் அன்னாரை விட அதிக நேசத்திற்குரியவராக யாரும் இருக்கவில்லை என்பது தெரிய வருகிறது. ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் அன்னாரிடம், தாங்கள் ஃகைபருக்கு மிக அருகில் முகாமிட விரும்பினீர்கள் . என்னுடைய சமுதாயத்தினர் தங்களுக்கு ஏதேனும் நஷ்டமிழைக்க முயற்சி செய்யக் கூடாது என்று எனக்கு அச்சம் இருந்தது. ஆகவே தாங்கள் ஃகைபரை விட்டு இன்னும் விலகிச் சென்று முகாமிட வேண்டும் என்று நான் விரும்பினேன் என்று பதில் அளித்தார்கள்.

யூதர்களுடைய சதித் திட்டங்கள் மற்றும் அவர்களின் அபாயகரமான நோக்கங்களைப் பற்றி ஸஹாபிகளும் அறிந்திருக்கின்றார்கள். ஃகைபரைச் சார்ந்த ஸைனப் எனும் பெண்ணொருத்தி விஷம் கலந்த உணவின் மூலமாக அன்னாரை கொலை செய்ய முயற்சி செய்ததும் கூட சில நாட்களுக்கு முன்னர் தான் நடந்திருந்தது. ஆகவே அன்னாருடைய தியாகம் மிகு ஸஹாபிகள் இப்பொழுது எந்தவொரு கணமும் அன்னாரை விட்டு கவனமற்றவர்களாக இருக்க விரும்பவில்லை.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் இரவு நேரத்தில் காவல் காக்கும் பணி செய்த சம்பவமும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்த திருமணத்தின் போது அபூ அய்யூப் (ரலி) அவர்களின் அப்பாவித்தனமான நேசமும் வெளிப்பட்டது. இரவு கழிந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் காலை நேரத்தில் தம் கூடாரத்தை விட்டு வெளியே வந்த போது ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் கையில் வாளேந்தியவாறு கூடாரத்திற்கு வெளியே சுதாரிப்புடன் நிற்பதைக் கண்டார்கள். என்ன விஷயம் ? என்று அன்னார் (ஸல்) கேட்டபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! யூதப் பெண்ணான இந்த புதிய முஸ்லிம் பெண்ணை கண்டு எனக்கு அச்சம் உள்ளது என்றார்கள். அதாவது ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களைக் கண்டு. அவளுடைய தந்தையும், கணவரும், அவளுடைய சமுதாயத்தைச் சார்ந்த மக்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். இப்பெண்ணோ இப்போதுதான் புதிதாக முஸ்லிமாக ஆகி இருக்கின்றாள். தங்களுக்கு ஏதேனும் துன்பம் விளைவித்து விடக் கூடாதே! என்று நான் இரவு முழுவதும் வாளேந்தியவாறு வெளியே காவல் பணிக்காக நின்று கொண்டிருந்தேன் என்று கூறினார்கள். அவர்களின் அப்பாவித்தனமான நேசத்தைக் கண்டு பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வே! அபூ அய்யூப் என்னை பாதுகாத்தவாறு இரவை கழித்தது போன்று நீ அவரை பாதுகாப்பாயாக! என்று அவர்களுக்காக துஆ செய்தார்கள்.

அபூ அய்யூப் (ரலி) அவர்களின் பெயர் காலித் பின் ஸைத் ஆக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்த பிறகு பல மாதங்கள் வரை அன்னாருக்கு விருந்தோம்பல் செய்யக் கூடிய நல்வாய்ப்பும் இந்த ஸஹாபிக்கு கிடைத்திருந்தது. ஹிஜ்ரி 50-ம் வருடம் ஒரு போர் நடவடிக்கையின்போது இவர்கள் மரணமடைந்தார்கள். இஸ்தான்புலில் இவர்களின் மண்ணறை உள்ளது.

எவ்வாறிருப்பினும், அடுத்த நாள் அன்னார் (ஸல்) சார்பாக வலீமா விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வலீமா விருந்தும் கூட மிகவும் கண்ணியமானதாகவும், எளிமையானதாகவும் இருந்தது. பேரீத்தம் பழம், பன்னீர் மற்றும் நெய் ஆகியவற்றால் ஆயத்தம் செய்யப்பட்ட ஹய்ஸ் எனும் உணவு அனைவருக்காகவும் ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது. மூன்று நாள் தங்கிய பிறகு அங்கிருந்து புறப்பட்டார்கள். ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் விடுதலையே அவர்களின் மஹ்ராக நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் கனவைப் பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கின்றது. இந்த திருமணத்தின் மூலம் அதன் உண்மைத்துவமும் தெளிவாகிறது. அறிவிப்பில் வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் கண்ணுக்கருகில் நீல நிற தழும்பை கண்டபோது, இந்தக் காயத்தின் அடையாளம் எதனால் ஏற்பட்டது? என்று வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் கூறினார்கள்: தாங்கள் ஃகைபருக்கு வருவதற்கு சில நாட்கள் முன்பு - சில அறிவிப்புகளின் அடிப்படையில் ஃகைபரை முகாமிட்டிருந்த நாட்களில் நான் ஒரு கனவு கண்டேன். யஸ்ரப் திசையில் இருந்து சந்திரன் வந்து என் மடியில் விழுந்து விட்டது. நான் இந்த கனவை எனது கணவருடைய தாய்வழி பாட்டனாரிடம் கூறியபோது, அவர் எனது கன்னத்தில் ஓங்கி அறைந்தார். நீ யஸ்ரபின் அரசருடன் அதாவது, முஹம்மது (ஸல்) அவர்களுடன் திருமணம் புரிய கனவு காண்கிறாயா? என்று கேட்டார். சில அறிவிப்புகளில், இந்த கனவு மிகவும் பழைய கனவு என்றும், ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் தந்தை ஹுயய் கன்னத்தில் அறைந்தார் என்றும் வருகிறது. ஆனால் பெரும்பாலான நூல்களில் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் கணவர் கன்னத்தில் அறைந்ததாக உள்ளது. இதுவே அதிக சாத்தியமான விஷயமாக தெரிகிறது.

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் பெயர் ஸைனபாக இருந்தது. ஆனால், போர்ச் செல்வம் பங்கிடப்படுவதற்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களை விடுதலை செய்து விட்டார்கள். அப்போதைய வழக்கத்தின்படி, போர்ச் செல்வம் பங்கிடப்படுவதற்கு முன்பு எந்த செல்வமெல்லாம் தலைவருக்காக ஒதுக்கப்பட்டிருக்குமோ அது ஸஃபிய்யா என்றும் அல்லது ஸஃபா என்றும் அஸ்ஃபா என்றும் அழைக்கப்பட்டு வந்தது. இந்த வகையில் அவர்களின் பெயர் ஸஃபிய்யா என்று பிரபலமடைந்தது.

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 50-ம் ஆண்டுடில் ஹஸ்ரத் அமீர் முஆவியா (ரலி) அவர்களின் காலகட்டத்தில் மரணமடைந்தார்கள். ஜன்னத்துல் பகீயில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் திருமணத்தையும் மேற்கத்திய வரலாற்றாசிரியர்கள் விமர்சித்துள்ளார்கள். மேலும் அவர்கள் தமது பழக்கத்திற்கேற்ப ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் திருமணத்தைக் குறித்து சில ஆட்சேபனைகளை செய்துள்ளார்கள். அது அவர்களின் அறிவீனத்திற்கும், காழ்ப்புணர்ச்சிக்கும் சான்றாக உள்ளது. உதாரணமாக, என்ஸைக்லோபீடியா பிரிட்டானிக்கா உடைய ஒன்பதாவது பதிப்பில் Muhammadanism என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. அதன் மொழியாக்கம் என்னவென்றால், இந்த வெற்றிகரமான போரின் இறுதி சாதனை என்னவென்றால், அரசனுடைய மகளுடன் முஹம்மது (ஸல்) அவர்கள் செய்த திருமணம் ஆகும். அவ்வாறான ஒருவருடன் திருமணம் செய்வதில் ஸஃபிய்யா அவர்களுக்கு எவ்வித அருவருப்பு தோன்றவில்லை. இதை மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்கள் எழுதியிருக்கின்றனர். ஸஃபிய்யா அவர்களின் தந்தை ஹுயய் மற்றும் அவருடைய கணவர் கினானா கொல்லப்படுவதற்கு யார் காரணமாக இருந்தாரோ, இன்னும் கூறுவதென்றால் ஸஃபிய்யா மிகவும் மகத்துவத்துடன் புதிய நிலைக்கேற்ப தம்மை மாற்றிக் கொண்டார் என்றே கூறலாம். அவரை விட அதிக பாராட்டுக்குரியது ஸைனப் எனும் இன்னொரு யூத பெண்மணியினுடைய நடவடிக்கையாகும். தன் சமுதாயத்தினரை கொன்றவருக்கு விஷம் கொடுக்க அவள் முயற்சித்தாள். அந்த குற்றத்தின் காரணமாக அவள் தன் உயிரை இழக்க நேரிட்டது. அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. ஆயினும், முஹம்மது (ஸல்) தம் இறுதி நோயின் போதும் கூட அந்த விஷத்தின் தாக்கத்தை உணர்ந்து கொண்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

அதாவது ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களை விமர்சித்தவாறு எழுதும்போது, அவர்களின் கணவர் மற்றும் தந்தை கொல்லப்பட்டிருக்கும்போது கொஞ்சமாவது அவர்கள் தன்மானத்தை வெளிப்படுத்தி இருக்க வேண்டாமா? அதற்காக பழிவாங்கியிருக்க வேண்டாமா? ஆனால் அவர்களோ சுயநலத்திற்கு முன்னுரிமை வழங்கியவாறு முஹம்மது (ஸல்) அவர்களை திருமணம் செய்து கொண்டார்கள்.

இதற்கு எதிரில் விஷம் கொடுத்த மற்றொரு யூதப் பெண்ணை அவர்கள் பாராட்டுகிறார்கள். குறைந்தபட்சம் அவளோ தன்மானத்தை வெளிப்படுத்தி இருந்தாள்; அன்னாரை கொல்வதற்கு முயற்சித்தாள் என்று எழுதி இருக்கிறார்கள். இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது இந்த எழுத்தாளர்கள் கொண்டுள்ள பகைமை மற்றும் வெறுப்புக்கு எல்லையே இல்லை. ஓரளவு அறிவைக் கொண்ட ஒருவர் இவர்களின் எழுத்துக்களை படிக்கும்போது, எம்மாதிரியான முடிவுக்கு வருவார் என்று இவர்கள் கொஞ்சம் கூட சிந்திப்பதில்லையே! மார்க்க துவேஷத்தின் விஷம் இவர்களின் எழுத்துக்களில் இருந்து வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. நீதியோடு இவர்கள் நடந்து கொள்வதில்லை. ஃகைபருடைய யூதர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை கடுமையாக எதிர்த்தார்கள். அதற்குப் பிறகு அம்மக்களோடு எவ்வாறு நடந்து கொண்டிருக்க வேண்டும்? போரின் சட்ட திட்டம் என்னவென்றால், அது அந்தக் காலத்து போராக இருந்தாலும் சரி; அல்லது தற்காலத்தின் நாகரீக உலகப் போராக இருந்தாலும் சரி; அவர்கள் அனைவரும் வாளால் வெட்டப்பட்டிருந்தாலும் அது ஆகுமானதாக இருந்திருக்கும். அவர்களுடைய பைபிளின் அடிப்படையிலும், அப்போதைய சட்டத்திட்டங்கள் மற்றும் வழிமுறையின் அடிப்படையிலும் இந்த அனைத்தும் ஆகுமானதாக இருந்தது. ஆனால், அந்த அநியாயக்காரர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த அளவு மன்னித்தலுடனும், மென்மையுடனும் நடந்து கொண்டார்கள் என்பதைப் பற்றி அவர்கள் பேசுவதே கிடையாது.

அவர்கள் இவ்விஷயத்தை பாராட்டுவது ஒருபுறம் இருககட்டும்! சமாதானத்திற்காக யூதர்கள் கோரிக்கை வைத்தபோது, அதை ஏற்றுக் கொண்டவாறு அவர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையையும் அன்னார் (ஸல்) ஒப்புக் கொண்டவாறு அவர்களை மன்னித்தார்கள். பிறகு அது மட்டும் இன்றி, அங்கேயே இருப்பதற்கு எங்களுக்கு அனுமதி அளித்தால் நாங்கள் விவசாயத்தை தொடர்வோம்; பாதி விளைச்சலை தாங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று அந்த யூதர்கள் கோரிக்கை வைத்தபோது, அவர்களுடைய இந்த கோரிக்கையையும் அன்னார் (ஸல்) ஏற்றுக் கொண்டார்கள். சாந்தி மற்றும் சமாதானத்திற்கான ஓர் உடன்படிக்கை எழுதப்பட்டது. ஆனால் எழுதப்பட்ட அந்த உடன்படிக்கையின் மை கூட காயவில்லை ; அதற்குள் அம்மக்கள் சதித் திட்டம் செய்து ஒரு பெண் மூலமாக அன்னாருக்கு விஷம் கொடுக்க முயற்சித்தனர். அந்தப் பெண்ணும் குற்றத்தை ஒப்புக் கொண்டாள். இது பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது.

படித்தவர்கள் என்று அழைக்கப்படக் கூடிய இன்றைய காலத்து நாகரீக உலகின் நாகரீக மக்கள், இவ்வாறு உடன்படிக்கையை முறிக்கின்ற ஒரு பெண்ணை ஒரு சமுதாயத்தின் கதாநாயகனைப் போன்று முன்வைக்கின்றார்கள். ஆனால் எந்தப் பெண் உண்மையைக் கண்டு , அன்னாருடைய மேலான நல்லொழுக்கங்களை தம் கண்களால் கண்டு உமக்கு விடுதலை வழங்கப்படுகிறது என்று அன்னார் (ஸல்) கூறிய பிறகும் கூட அன்னாருடன் இருப்பதற்கு முன்னுரிமை அளித்தாரோ அந்தப் பெண்ணை பற்றி இவர்கள் விமர்சிக்கின்றார்கள். ஆனால், ஒருவர் தன் விவகாரங்களிலும், மார்க்க நம்பிக்கை தொடர்பான விவகாரங்களிலும் சுதந்திரமானவர் என்று கூறப்பட்டதைக் குறித்தும், நீதி நேர்மையின் அனைத்து அடிப்படைகளையும் அவர்கள் இப்போது மறந்து விடுவார்கள். இதே போன்று ஆட்சேபனை செய்யக் கூடிய இன்னும் சிலரும் ஆட்சேபனை செய்திருக்கின்றார்கள்; பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் அழகைக் குறித்து கேட்டறிந்த போது, ஹஸ்ரத் திஹ்யா (ரலி) அவர்களிடமிருந்து அவர்களை திரும்ப பெற்றுக் கொண்டு அன்னாரே திருமணம் செய்து கொண்டார்கள் என்பதை போன்ற சில மோசமான வகையில் ஆட்சேபனை செய்கிறார்கள்.

தம் குறைமதியின் காரணமாகவே மக்கள் இது போன்ற ஆட்சேபனைகளை செய்கின்றார்கள். இரண்டாவது விஷயம், பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மையான வாழ்க்கையை புரிந்து கொள்ளாததன் காரணமாகவே இவை உருவாகின்றன. இந்த மக்களுடைய உள்ளங்கள் மார்க்க துவேஷத்தினால் நிறைந்து காணப்படுகின்றன. இந்த மக்கள் நீதியின் கண்ணோடும், தூய உள்ளத்தோடும் பார்ப்பார்கள் என்றால், இவ்வாறான சிந்தனையை கொண்டிருக்க மாட்டார்கள். அன்னாருடைய கடந்த கால வாழ்க்கையை பார்ப்போம் என்றால் - அதை குறித்து திருக்குர்ஆனும் மிக அழகிய முறையில் கவனமூட்டியவாறு,

فَقَدْ لَبِثْتُ فِيْكُمْ عُمُرًا مِّنْ
قَبْلِهٖٓ اَفَلَا تَعْقِلُوْنَ

என்று கூறுகிறது.

அதாவது இந்த நிலைக்கு முன்னரும், உங்களுக்கிடையில் நான் நீண்ட காலம் வாழ்ந்திருக்கின்றேன். நீங்கள் சிந்திப்பதில்லையா?

எந்த சமுதாயத்தில் மது, மாது ஆகியவற்றின் சபைகள் பொதுவானதாக மட்டுமின்றி, பெருமையின் வெளிப்பாடாக இருந்ததோ அவ்வாறான சமுதாயத்தில் அன்னார் (ஸல்) தம் முழு இளமையையும் எவ்வாறு கழித்தார்கள்? என்றால், விதவையாகவும், கண்ணியத்திற்குரியவராகவும் மதிப்பு மிக்க பெண்மணியாகவும் இருந்த ஒரு பெண்ணை திருமணம் புரிந்து ஏறக்குறைய 50 வயது வரை அதே விதவைப் பெண்ணுடன் தமது முழு இளமைப் பருவத்தையும் அன்னார் (ஸல்) கழித்தார்கள். குறைஷிய தலைவர்களோ அழகிலும், அழகான பெண்ணை அன்னாருக்கு முன்னால் கொண்டு வந்தபோதிலும், வரலாற்றில் இருந்து நிரூபணமாவது போன்று அன்னார் (ஸல்) அம்மக்களின் கோரிக்கையை நிராகரித்து விட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் இளமைப் பருவத்தையும், முற்காலத்து வாழ்வையும் பார்க்கும்போது, நவூதுபில்லாஹ் அன்னார் (ஸல்) திருமணப் பிரியர் அல்ல என்பதும், அதனுடன் அன்னாருக்கு கொஞ்சம் கூட தொடர்பு இல்லை என்பதும் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. பிற்காலத்தில் அன்னார் (ஸல்) திருமணம் புரிந்தார்கள் என்றால், அதற்கென்று ஒரு நுட்பமான காரணம் இருந்தது. அது என்னவென்றால், எதிரி சமுதாயம் அல்லது கோத்திரத்துடன் சாந்தி, சமாதானம் மற்றும் அன்பு நேசத்தின் தொடர்பை உருவாக்குவதற்காகவும், நம்பிக்கையின் சூழலை உருவாக்குவதற்காகவும் அவ்வாறு செய்தார்கள். உதாரணமாக, பனூ முஸ்தலிக்குடைய தலைவர் ஹாரிஸ் அவர்களின் மகள் ஜுவைரியா அவர்களுடனும், குறைஷியரான அபூ ஸுஃப்யானினின் மகள் உம்மு ஹபீபா அவர்களுடனும் அவ்வாறே ஃகைபர் வெற்றி கொள்ளப்பட்ட போது, அந்த கோத்திரத்தின் (மரணமடைந்திருந்த) தலைவருடைய மனைவியாகவும், (இன்னோர் தலைவரின்) மகளுமாக இருந்த ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் அடிமைப் பெண்ணாக ஒரு சாதாரண நபரிடம் ஒப்படைக்கப்பட்டால் அது அவர்களை அவமதிக்கும், இழிவுபடுத்தும் செயலாக இருந்திருக்கும். பெருமானார் (ஸல்) அவர்கள் ஆன்மிக உலகின் அரசராக இருக்கின்ற அதே நேரத்தில் மதீனத்து ஆட்சியின் அரசராகவும் இருந்தார்கள். எனவே அன்னார் (ஸல்) முதலில் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களை விடுதலை செய்து அவர்களுக்கு கண்ணியமளித்தார்கள். பிறகு அவர்கள் தம் வீட்டாரை நோக்கி செல்வதற்கு அனுமதியளித்து அவர்களின் தகுதி அந்தஸ்தை இன்னும் அதிகமாக்கினார்கள். உங்கள் வீட்டினரை நோக்கி நீங்கள் செல்லலாம் என்று கூறினார்கள். பிறகு அவர்களுடன் திருமணம் புரிந்து அவர்களுக்கு எப்படிப்பட்ட அந்தஸ்தை வாங்கினார்கள் என்றால், நம்பிக்கை கொண்ட அனைவருக்கும் தாய் என்று அவர்கள் அழைக்கப்பட்டார்கள். இன்னும் கூறுவதென்றால், இதனால் அவர்களுடைய சமுதாயம் மற்றும் குடும்பத்தின் கண்ணியம் மேலும் அதிகரித்தது. சமூகத்தில் அமைதியின் ஒரு சூழல் உருவானது.

வில்லியம் மன்ட்ஹமரீ வாட் என்ற ஒரு ஸ்காட்டிஷ் மேற்கத்திய எழுத்தாளர் Muhammad at medina என்ற தனது நூலில் இஸ்லாத்திற்கெதிராகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கெதிராகவும் கடுமையான விமர்சனங்களை எழுதி இருக்கிறார்.

இவருக்கு மார்க்க துவேஷம் இருந்த போதிலும், பெருமானார் (ஸல்) அவர்களின் திருமணத்தை குறித்து எழுதும்போது யூதர்களின் மகள்களான ஸஃபிய்யா மற்றும் ரீஹானா ஆகியோருடன் திருமணம் புரிந்தது அரசியல் நடவடிக்கையாக இருக்கலாம் என்று எழுதும் கட்டாயத்திற்கு ஆளாகி விட்டார். அழகை கண்டு திருமணம் புரிந்தார் என்று எழுதவில்லை.

மாறாக, அரசியல் நடவடிக்கையாக இருக்கலாம் என்று எழுதி இருக்கிறார். அவர்களுடைய அதாவது பெருமானார் (ஸல்) அவர்களின் திருமணத்தை பொருத்தவரை அல்லது பெண்களுடன் அவர்கள் செய்த திருமணத்தை

பொருத்தவரை அதற்கான அடிப்படை காரணம் அநேகமாக அரசியல் நோக்கமாக இருந்திருக்கலாம் என்று எழுதி இருக்கிறார். எந்த ஒரு தவறான கண்ணோட்டமும் இல்லை என்று குறைந்தபட்சம் அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

(ENCYCLOPEDIA Britanica 9th edition, Vol 16, page no- 558,) (Muhammad At Medina By Montgomery watt page- 288)

பிரபல்யமான மேற்கத்திய வரலாற்று ஆசிரியர் வில்லியம் முயர் என்பவர் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் திருமணத்தை குறித்து செய்துள்ள ஆட்சேபனைக்கு ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு பதிலளித்தவாறு கூறுகிறார்கள்:

மிஸ்டர் முயர் ஆட்சேபனை செய்திருக்கிறார். ஆனால், அமைதியை நிலைநாட்டுவதற்காகவும், செல்வாக்கு மிக்க மக்களிடத்தில் நேசத்தை உருவாக்குவதற்காகவும் வெற்றி கொள்ளப்பட்ட நாட்டினுடைய அரசனின் மகளுடனோ அல்லது மனைவியுடனோ திருமணம் செய்யும் வழக்கம் அரேபியாவில் இருந்ததை அவர் அறியவில்லை. அவ்வாறு நடக்கும்போது, இனி எந்த பிரச்சனையும் இல்லை என்று அனைத்து குடிமக்களும் அரச குடும்பத்தினரும் அதனால் நிம்மதி அடைந்து வந்தார்கள். ஆகவேதான், ஃகைபர் வெற்றிக்குப் பிறகு அனைத்து யூதர்களும் அங்கேயே இருக்க விரும்பினார்கள்.

(குத்பாத்தே நூர், பக்கம் 532)

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் திருமணம் தொடர்பாக முஸ்லிம் வரலாற்றாசிரியர்களும், வாழ்க்கை வரலாற்றாசிரியர்களும் கூட கவனமின்மையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். தலையோ பாதமோ இல்லாத அறிவிப்புகளை எவ்வித ஆய்வும் இன்றி அப்படியே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். உதாரணமாக, பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களை முதலில் ஹஸ்ரத் திஹ்யா (ரலி) என்பவருக்கு கொடுத்தார்கள். ஆனால், அவர்களின் அழகை குறித்து கேட்டறிந்தபோது ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களை வரவழைத்து தமக்காக வைத்துக் கொண்டார்கள் என்று இந்த அறிவிப்பு எல்லா வரலாற்று நூல்களிலும் வாழ்க்கை வரலாற்று நூல்களிலும் காணக் கிடைக்கிறது. இதே போன்ற கருத்தையுடைய ஓர் அறிவிப்பு புகாரியிலும் உள்ளது. அந்த அறிவிப்பு என்னவென்றால், ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஃகைபரை சென்றடைந்தபோது, அல்லாஹ் கோட்டையை வெற்றி கொள்ள வைத்தான். அப்போது ஹுயய் பின் அக்தபுடைய மகளான ஸஃபிய்யா (ரலி) அவர்களின் அழகை குறித்து அன்னாருக்கு முன்னால் எடுத்துக் கூறப்பட்டது. ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் புதுப்பெண்ணாக இருந்தார்கள். அவர்களுடைய கணவர் கொல்லப்பட்டிருந்தார். அதாவது, திருமணம் நடந்து கொஞ்சம் காலம்தான் ஆகியிருந்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களை தமக்காக தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். இது எப்படிப்பட்ட அறிவிப்பு என்றால் நோயுள்ள சிந்தனையைக் கொண்ட சிலர் இதைக் கண்டு ஆட்சேபனை செய்கின்றனர்.

புகழ்பெற்ற வாழ்க்கை வரலாற்றாசிரியரான அல்லாமா ஷிப்லீ நுஃமானி அவர்கள் இந்த அறிவிப்பை குறித்து எடுத்துரைத்தவாறு எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தொடர்பாக சில ஹதீஸ் நூல்களில் இடம்பெற்றுள்ள சம்பவம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் முதலில் அவர்களை திஹ்யா கல்பீ (ரலி) அவர்களுக்கு கொடுத்திருந்தார்கள். பிறகு யாரோ ஒருவர் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் அழகை புகழ்ந்து கூறியபோது, திஹ்யாவிடமிருந்து திரும்ப பெற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு பதிலாக ஏழு அடிமைப் பெண்ணை கொடுத்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. எதிரிகள் இந்த அறிவிப்பை மிகவும் அருவருப்பான முறையில் எடுத்து வைத்திருக்கின்றார்கள். அசல் அறிவிப்பிலேயே இந்த அளவு விஷயம் இருக்கும்போது எதிரிகள் அதிலிருந்து எந்த அளவு பயனடைவார்கள் என்பது வெளிப்படையே. உண்மை என்னவென்னால், ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் இந்த சம்பவம் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் சார்பாக இச்சம்பவம் பலமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அவை ஒன்றுக்கொன்று முரணானதாக உள்ளன. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களின் இன்னோர் அறிவிப்பில் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் திஹ்யா (ரலி) அவர்களின் பங்கில் வந்தபோது, பெருமானார் (ஸல்) அவர்களிடம் மக்கள் வந்து, இப்பெண்மணி ஃகைபருடைய தளபதிகளின் உயர் அந்தஸ்தை கொண்ட கண்ணியத்திற்குரிய ஒரு பெண்மணி ஆவார். அன்னாரைத் தவிர வேறு யாருக்கும் பொருத்தமானவர் கிடையாது என்று கூறினர். முதல் விஷயம், புகாரியில் அறிவிக்கப்பட்டுள்ளது போன்று ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் அழகு புகழ்ந்து கூறப்பட்டது; அச்சம்பவம் உண்மையானது என்றால், அறிவிப்பு செய்த ஸஹாபிக்கு பின்னால் வந்த ஏதேனும் ஒருவர் இந்த சொற்களை தம் சார்பாக இணைத்து கூறி இருக்கலாம். ஏனெனில், எந்த ஒரு ஸஹாபியும் பெருமானார் (ஸல்) அவர்களின் மகத்துவத்தை அறியாதவராக இருக்கவில்லை. அதாவது முதலில், ஒரு ஸஹாபி அறிவித்திருக்கலாம். பிற்காலத்தில் சில மக்கள் அந்த அறிவிப்பில் சில விஷயங்களை இணைத்திருக்கலாம். ஏனெனில், ஸஹாபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் கண்ணியத்தை குறித்து இவ்வாறான விஷயத்தை கூறியிருக்க முடியாது. அன்னாருடைய அருளுக்குரிய மகத்துவத்தின் மீது எந்த வகையிலும் சிறிதளவும் விமர்சனமும் ஏற்படும் வகையில் அவ்வாறு கூறியிருக்க முடியாது. மக்களே தம் சார்பாக ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் அழகைக் குறித்தும், அத்துடன் அவர்களின் இதர சிறப்பம்சங்களை குறித்தும், குடும்ப அந்தஸ்தை குறித்தும், தகுதியை குறித்தும் கூறியிருக்கவும் வாய்ப்புள்ளது. அறிவிப்பாளர் தனக்கு நினைவில் இருந்தவற்றை சுருக்கமான சொற்களில் எடுத்துக் கூறி இருக்கலாம்.

ஆனால் ஒரு முக்கிய அடிப்படையான விஷயத்தின் பக்கம் வரலாற்றாசிரியர்களின் பார்வை செல்வதில்லை. அது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட மகத்துவமான அந்தஸ்தில் நிலை பெற்றிருந்தார்கள் என்றால், ஒரு நபரிடம் இருக்கும் இவ்வாறான தனிச்சிறப்புகள், சிறப்பம்சங்கள் போன்றவை அன்னாரைப் பொறுத்த வரை இரண்டாம் பட்சம்தான். அன்னார் (ஸல்) திருமணத்திற்காக முடிவெடுத்தார்கள் என்றால், அதற்கான அடிப்படை காரணம் இது கிடையாது. மாறாக அல்லாஹ்வுடைய கட்டளைக்கிணங்கதான் அன்னார் (ஸல்) திருமணம் புரிந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு அசைவும் இறை விருப்பம் இன்றி நிகழ்ந்தது கிடையாது. இறைவனே இதைக் குறித்து கூறியிருக்கின்றான்.

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ
وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

நீர் கூறுவீராக! எனது இறைவணக்கங்கள், எனது தியாகங்கள், எனது வாழ்வு, எனது மரணம் ஆகிய அனைத்தும் அனைத்துலகங்களின் இறைவனாகிய அல்லாஹ்விற்கே உரியன.(அல் அன்ஆம்: 163)

எவர் அனைத்து வேலைகளையும் இறைவனுக்காக செய்வாரோ, எவருக்கு ஒவ்வொரு நொடிப்பொழுதும் அர்ஷில் இருக்கின்ற இறைவன் வழிகாட்டுகின்றானோ அவர் இவ்வளவு பெரிய முடிவை சுயமே ஏன் எடுக்கப் போகிறார்? ஆகவே இந்த அனைத்து திருமணங்களையும் நிச்சயமாக இறை விருப்பத்திற்கிணங்கதான் அன்னார் (ஸல்) செய்தார்கள். அதனுடைய விளைவுகள் முற்றிலும் அருளுக்குரியதாகவும், நுட்பமானதாகவும் இருந்தன.

(புகாரி,கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் 4211) ( ஷிப்லீ அவர்கள் எழுதிய நூல் -ஸீரத்துன் நபீ (ஸல்) அவர்கள், தொகுதி 1, பக்கம் 283, மக்தப இஸ்லாமியா)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் என்ற தம் நூலில் இவ்வாறு கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களின் எந்தவொரு செயலும் எந்தவொரு சொல்லும் வஹீயின் கலப்பில்லாமல் இருக்கவில்லை என்றே அன்னாரைக் குறித்து ஸஹாபிகளின் நம்பிக்கை இருந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. அந்த வஹீ சுருக்கமானதாக இருந்தாலும் சரி; அல்லது விரிவானதாக இருந்தாலும் சரி; (அந்த வஹீ) மறைவானதாக இருந்தாலும் சரி; அல்லது வெளிப்படையாக இருந்தாலும் சரி; (அந்த வஹீ) தெளிவானதாக இருந்தாலும் சரி; அல்லது தெளிவற்றதாக இருந்தாலும் சரி; எந்த அளவுக்கென்றால், பெருமானார் (ஸல்) அவர்களின் குறிப்பான விவகாரங்களாக இருந்தாலும் சரி; கலப்பற்ற பேச்சுகளாக இருந்தாலும் சரி; அல்லது உண்ணுதல், குடித்தல் மற்றும் உடை தொடர்பான விஷயங்களாக இருந்தாலும் சரி; வாழ்க்கை முறையின் தேவைகளுள் இருந்த தினசரி வீட்டு வேலைகளாக இருந்தாலும் சரி; அந்த அனைத்து வேலைகளும், கூற்றுகளும் ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆன்மாவி) ன் ஒளியினால்தான் நடைபெறுகிறது என்பதால்தான் ஹதீஸ்களில் சேர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக, அபூ தாவூது போன்றவற்றில் ஒரு ஹதீஸ் உள்ளது. மேலும் இமாம் அஹ்மத் அவர்கள் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்; அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எவற்றையெல்லாம் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டேனோ அவற்றை மனனம் செய்வதற்காக எழுதி வைத்துக் கொண்டேன். இவ்வாறு செய்ய வேண்டாம் என்று சிலர் தடுத்தனர். ஏனெனில், அன்னார் (ஸல்) மனிதர் ஆவார்கள். சிலநேரம் கோபத்துடனும் பேசுகிறார்கள் என்று

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 03 - 10 APRIL 2025 Issue No.14 & 15

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கூறியபோது அதைக் கேட்டு எழுதுவதை நான் நிறுத்திக் கொண்டேன். இதைப் பற்றி அன்னாரிடம் கேட்டபோது, எந்த இறைவனின் கையில் என் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! என்னிடமிருந்து எது வெளிப்பட்டாலும் - அது சொல்லாக இருந்தாலும் செயலாக இருந்தாலும் அவை அனைத்தும் இறைவன் சார்பாகவே ஆகும் என்று கூறினார்கள். இதே ஹதீஸ் நூல்களில் சில விவகாரங்களில் பெருமானார் (ஸல்) அவர்களின் புரிதலில் ஏற்பட்டுள்ள தவறுகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதே! அன்னாருடைய அனைத்து சொல்லும், செயலும் இறையறிவிப்பினால்தான் இருந்தது என்றால், பிறகு அந்த புரிதலில் ஏற்பட்டுள்ள தவறுகள் ஏன் ஏற்பட்டன? என்று கேட்டால் அதற்கான காரணம் என்னவென்றால், புரிதலில் ஏற்பட்டுள்ள அந்த தவறுகளும் இறையறிவிப்பின் ஒளியை விட்டு விலகி இருக்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் இறை கட்டுப்பாட்டிலிருந்து ஒரு கணம் கூட விலகி இருக்கவில்லை என்பதாகும். புரிதலில் ஏற்பட்டுள்ள அந்த தவறுகளின் உதாரணம், மார்க்க விவகாரங்கள் தோன்ற வேண்டும் என்பதற்காக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தொழுகையில் சில சமயங்களில் மறதி ஏற்பட்டதுண்டு. ஆகவே இது போலவே சில சமயங்களில் மார்க்கம் முழுமை பெற வேண்டும் என்பதற்காகவும் சில நுட்பமான விவகாரங்கள் அதன் மூலமாக தோன்ற வேண்டும் என்பதற்காகவும் புரிதலில் ஏற்படும் தவறுகள் நிகழ்வதுண்டு. அந்த மனித மறதியும் கூட மற்ற மனித மறதியைப் போன்றது கிடையாது. மாறாக அது இறையறிவிப்பின் பண்பைக் கொண்டிருந்தது. ஏனெனில், இறைவன் சார்பாக குறிப்பான இயக்கம் இருந்தது. அது நபி மீது சூழ்ந்து கொண்டு அவரை சில நேரங்களில் எவ்வாறான திசையின் பக்கம் ஈர்த்து விடும் என்றால் அங்கு இறைவனின் பல நுட்பங்கள் இருக்கும். ஆகவே நாம் இவ்வாறான புரிதலில் ஏற்பட்டுள்ள தவறுகளையும் கூட இறையறிவிப்பை விட்டு தனித்ததாக கருதுவதில்லை. ஏனெனில், அது சாதாரண விஷயம் ஒன்றும் கிடையாது. மாறாக இறைவன் அப்போது தன் நபியை தன் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு பொதுவான நுட்பமான விஷயத்திற்காக ஓர் ஒளியை மறதி எனும் தோற்றத்தில் அல்லது தவறு எனும் வடிவத்தில் வெளிப்படுத்துகிறான். அத்துடனே இறையறிவிப்பும் தன் உத்வேகத்தில் வந்து விடுகிறது. உதாரணமாக, ஓடிக் கொண்டிருக்கும் ஒரு நதியின் நீரை ஒரு நுட்பமான காரணத்திற்காக நிறுத்தி விட்டு பிறகு மீண்டும் விடுவது போன்றதாகும். நதியின் நீர் வற்றிப்போய் விட்டது என்றோ அல்லது அது எடுத்துக் கொள்ளப்பட்டது என்றோ அப்போது எந்தவொரு அறிவுடையவரும் கூறமாட்டார். இதே நிலைதான் நபிமார்களின் புரிதலில் ஏற்படும் தவறுகள் ஆகும். பரிசுத்த ஆன்மாவாகிய (ஹஸ்ரத் ஜிப்ராயீல்(அலை)..) அவர்களோ ஒருபோதும் அவர்களை விட்டு விலகியிருப்பதில்லை. ஆனால், சில சமயம் இறைவன் சில நுட்பமான விஷயங்களுக்காக நபிமார்களின் புரிதலையும் சிந்தனையையும் தன் கட்டுபாட்டில் எடுத்துக் கொள்கிறான். அப்போது ஏதேனும் சொல்லோ செயலோ மறதி அல்லது தவறு ஆகிய தோற்றத்தில் அவர்கள் மூலமாக வெளிப்படுகின்றது. அப்போது திட்டமிடப்பட்டிருந்த அந்த நுட்பம் வெளிப்பட்டு விடுகின்றது. பிறகு இறையறிவிப்பின் நதி வேகமாக ஓட ஆரம்பிக்கின்றது. நடுவிலிருந்து புரிதலில் ஏற்பட்டுள்ள (அந்த) தவறு அகற்றப்படுகின்றது. அதுவொன்று இருந்தது என்றே தெரியாத அளவுக்கு (அகற்றப்படுகின்றது).

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓர் அத்தி பழத்தை உதாரணமாக கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அத்தி மரத்தை நோக்கி ஓடினார்கள். அதன் பழத்தை உண்ண வேண்டும் என்பதற்காக. பரிசுத்த ஆன்மாவாகிய (ஹஸ்ரத் ஜிப்ராயீல் (அலை) அவர்களும் உடனிருந்தார்கள். அப்போது அத்தி மரத்தில் பழம் இருக்கவில்லை என்று பரிசுத்த ஆன்மாவாகிய (ஹஸ்ரத் ஜிப்ராயீல் (அலை) ....) அவர்கள் கூறவில்லை. அரிதாக இருப்பது இல்லாமல் இருப்பதற்கு சமம் என்று அனைவரும் அறிவர். எப்போதாவது ஒரு பொருள் இருக்கும் என்றால் அது இல்லாததைப் போன்றதாகும்.

ஆகவே நம்முடைய தலைவரும், எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடைய 10 லட்சத்திற்கும் நெருக்கமான சொற்களிலும். செயல்களிலும் முழுக்க முழுக்க இறை தோற்றம் தென்படும்போது, ஒவ்வொரு விஷயத்திலும், அசைவிலும், அசைவின்மையிலும், கூற்றுகளிலும், நடவடிக்கைகளிலும் பரிசுத்த ஆன்மாவாகிய ஜிப்ராயீல் (அலை) அவர்களின் மின்னுகின்ற ஒளிகள் தென்படும்போது ஓரிரு விஷயங்களில் மனிதத் தன்மையின் வாடையும் வீசுகிறதென்றால் அதனால் என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது? இன்னும் கூறுவதென்றால், மக்கள் ஷிர்க் எனும் சோதனையில் மூழ்கி விடாமல் இருப்பதற்கு (அன்னார்) மனிதர் என்று நிரூபணம் ஆவதற்கு எப்பொழுதாவது இவ்வாறு நடக்க வேண்டியதும் அவசியமாகும்.

ஆகவே ஏதேனும் ஹதீஸிலோ, வரலாற்று நூல்களிலோ அல்லது வாழ்க்கை வரலாறு நூல்களிலோ பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக ஏதேனும் அறிவிப்பு வந்துள்ளது என்றால், நான் மேலே ஓதி காட்டிய திருக்குர்ஆன் வசனத்தின் அடிப்படையில் அதை பார்க்க வேண்டும். அல்லாஹ்வுக்காகவே அன்னாருடைய அனைத்தும் இருந்தன. அந்த வசனத்தின் ஒளியிலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியிலும் இந்த விஷயங்களை நாம் பார்க்க வேண்டும்; கண்டறிய வேண்டும். அதுவல்லாமல், ஒவ்வொரு மேற்கத்திய எழுத்தாளர்களின் விஷயத்தையும் ஒப்புக் கொண்டு (வீணாக) பழி சுமத்தக் கூடாது. நாம் பதில் பேச முடியாமல் ஆகிவிட்டோம் என்று நினைத்து விடக் கூடாது. இதுதான் பெருமானார் (ஸல்) அவர்களின் பரிசுத்தத் தன்மையை நிலைநாட்டக் கூடிய அசல் பணியாகும். வெறுமனே முழக்கமிடுவது போதுமானதன்று.

இரண்டு நாட்களுக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் ரமலானும் ஆரம்பமாக இருக்கின்றது. அதிலிருந்து முழுமையான முறையில் பயனடைவதற்கும், ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நோன்புகளை நோற்பதற்கும், துஆக்கள் செய்வதற்கும் அல்லாஹ் அனைவருக்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக! அதற்காக துஆவும் செய்யுங்கள்; முயற்சியும் செய்யுங்கள்.

இப்போது நான் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். ரப்வாவை சார்ந்த சவ்தரி முஹம்மது அன்வர் கியாஸ் ஸாஹிப் அவர்களின் ஜனாஸா ஆகும். இவர்கள் சவுதரி முஹம்மது இஸ்லாம் ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் மகன் ஆவார்கள். கடந்த நாட்களில் இவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.


إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் அவர்கள் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அவர்களுடைய மகன் நாஸிர் மஹ்மூத் தாஹிர் ஸாஹிப் அவர்கள் கென்யாவுடைய மிஷனரி இன்சார்ஜ் ஆக இருக்கின்றார்கள். நாட்டுக்கு வெளியே இருப்பதன் காரணமாக தன் தந்தையுடைய

இதன் தொடர்ச்சி....9-ம் பக்கம்....

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad